1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆனிமாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 25-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

கடுங்குளிரோடுகூடிய கடுங்காற்று புசல்போலவீசிக்கொண்டிருக்கிறது. மப்புமந்தாரம் அதிகமாகக் காணப்படுகின்றது. தொற்றுக்காய்ச்சல்போன்று தடிமன், இருமலுடன்கூடிய ஓர்வித காய்ச்சல் தலைகாட்டியிருக்கின்றது. இவற்றிற்கெல்லாம் அந்தச்சூரியகிரகணந்தான்காரணமென்று அதன்மேல் பழிபோட்டுக் கொள்ளுகின்றார்கள்.

### மருதமடுப்பதி முதற்திருநாள்

மருதமடுச் செபமாலை நாயகியின் ஆடிப்பெரிய மகோற்சவத்தின்போது நடந்தேறும் இருபெருந் திருநாட்களிலும் முதலாவதுதிருநாள் சென்ற27-ந் திகதி திங்கட்கிழமை கொண்டாடப் பெற்றபோது, பத்தாயிரவருக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் திருப்பதியிலே சமுகமாயிருக்க, நம்மேற்றிராணியாண்டவர் திருநாட்பாடற்பூசை நிறைவேற்றினரெனச் செய்திகிடைத்திருக்கிறது. திவ்வியபூசையின்பின் மடுச்செபமாலை இராக்கினியின் அற்புததிருச்சுரூப சுற்றுப்பிரகாரம் வழமைபோலப் பக்தியருட்சியாக நடைபெற்றுக் கோவிலை அடைந்ததும், அதுகொண்டு ஆண்டவர் அவர்கள் யாத்திரிகர்களையெல்லாம் ஆசீர்வதித்தனர். முதலாவதுதிருநாள் முடிந்து ஒருதொகையான யாத்திரிகர்கள் திரும்பியபோதிலும் இரண்டாவதுபெரிய திருநாளுக்கென்று பெருந்தொகையாத்திரிகர்கள் திருப்பதியிற் போய்ச் சரிந்தவண்ணமிருக்கின்றார்கள். இன்றுவியாழக்கிழமை அப்பதியிலே திருஇருதயத்திருநாளும், வருகிறஞாயிற்றுக்கிழமை திவ்வியநற்கருணைத்திருநாளும் கொண்டாடப்படவிருக்கின்றன.

### பழையமாணவரின் கல்லூரிவிஜயம்

மாட்சிமைதங்கிய மகாராணியாரால் சமீபத்திலே நைற்பட்டஞ் சங்மானிக்கப்பெற்றவரான சேர் சங்கரப்பிள்ளை பாராசசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணம் வந்தபோது தாம்கல்விபயின்ற சம்பத்திரிசியார்கல்லூரிக்கும் சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகரான சேர் அல்பேட் பீரிஸ் அவர்கள்சமேதராய்ச் சென்றசெவ்வாய்க்கிழமைகாலை விஜயஞ்செய்யலாயினர். அவர்கள் இருவரையும் கல்லூரி அதிபர் வண. என். அருள்நேசன் சுவாமியவர்கள் நல்வரவேற்றுக் கல்லூரியையும், மாணவர் விடுதிகளையும் சுற்றிவர அழைத்துச் சென்று அவர்களுக்குக்காண்பித்தார். பின்னர் கல்லூரிமாணவர்கள் கூட்டத்தில் அவர்பேசியபோது: "வாழ்க்கையில் நான் வெற்றியடையக்காரணம், எனதுவிடாமுயற்சியும், கடினஉழைப்புமேயாகும்; பாடசாலையில் பின்தங்கியுள்ள மாணவர்கள் நம்பிக்கையை இழக்க வேண்டியதில்லை; அவர்கள் கமத்தொழிலில் ஈடுபட்டால் இயற்கை அன்னை அவர்களுக்கு இரக்கங்காட்டுவாள்" எனக்கூறினார்.

### புதிய எம். எஸ்சி. பட்டதாரி

சலாபமேற்றிராசனத்தைச் சேர்ந்தவரான வண. ஜே. பி. அன்ட்ருடி, பி. எச்டி. சுவாமியவர்கள் லண்டன் சர்வகலாசாலையின் பொருளாதார சாஸ்திர எம். எஸ்சி. பரீட்சையில் அரங்கேறியிருக்கிறாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

### பாடசாலைகளும் உதவிப்பணமும்

அரசாங்கத்தினிடமிருந்து உதவிப் பணம் பெற்றுவருகின்ற பாடசாலைகளுக்குக் கொடுபடும் உதவிநன்கொடைப்பணம் அடுத்த புதியஅரசிறைவருடத்திலே 70லட்சம் ரூபாவால் அதிகரிக்கவிருக்கின்றது. நிகழும்அரசிறைவருடத்திலே இதற்கென அரசாங்கம் விட்டிருந்தபணம் 3 கோடியே 27 லட்சத்து 66 ஆயிரத்து 980 ரூபா. அடுத்தபுதிய அரசிறைவருடத்திலே இதற்கென அரசாங்கம் விட்டிருக்கும் பணம் 4 கோடியே 2லட்சத்து 50 ஆயிரம்ரூபாவாகும்.

### இருவரும் தோல்வியடைந்தனர்

அம்பலாந்தோட்டைக்குச் சமீபமான வலனைக் கிராமச்சங்கத்தின் மூன்றும்வட்டாரத்திற்கென நடைபெற்ற உபதேர்தலிலே புருஷனை எதிர்த்து மனைவிபோட்டியிட்டாள். தம்பதிகள் இருவரும் நானோ, நீயோ வென்று ஊக்கமாகத் தேர்தலில்ஈடுபட்டனர். ஆனால், இருவருமே தோல்வியுற்றனர். மனைவி கட்டுக்காசையும் இழந்துபோயினாள். அதிர்ஷ்டவசமாகப் புருஷன் கட்டுக்காசை இழக்காமல் தப்பிக்கொண்டான்.

### காரியாதிகாரியின் வேண்டுகோள்

கமைச்சிக்கமங்கள் கடந்தகாலங்களிலே வறிய கமக்காரராலேயே உழுதுபண்படுத்திப் பயிர்ச்செய்கைக்குள்ளாயின; ஆனால், இப்போது நடுத்தரவகுப்பினரும், செல்வர்களும் இரணைமடுப்பகுதியின் பல்வேறுதிட்டங்களிலும் தங்கள்பணத்தை முதலீடு செய்திருக்கிறார்களென அன்று கிளிநொச்சி, சென்தெரேசா கலவன்பாடசாலையில் மூன்றுநாள் கூட்டுறவுப் பயிற்சிவகுப்பை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது பளைக்காரியாதிகாரி திரு. ரி. முருகேசபிள்ளை அவர்கள் கூறலாயினர். மேலும்அவர் பேசியவிடத்து: 1948-ம்ஆண்டு இங்கே 3,000 பேராயிருந்த சனத்தொகை இப்போது 16,000 பேராக அதிகரித்திருக்கின்றது; சனங்கள் இந்தப்பகுதியை இப்போது தங்கள்நிரந்தர வாசஸ்தலமாக்கியிருக்கின்றார்கள்; கடந்தகாலங்களிலே காலபோகத்தில்மாத்திரம் பெருந்தொகையானோர் இங்குவந்து அறுவடைமுடிந்ததும் திரும்பிப் போய்விடுவார்கள்; அதனால், யாழ்ப்பாணக்குடாநாட்டிலே தங்கள்வீடுகளுக்குச் சமீபமாய்ச் சிறுகாணித் துண்டுகளிலே பயிர்ச்செய்கை நடத்துவதிற்குப்பதில் எல்லோரும் வன்னியிலேகுடியேறி ஏக்கர்க்கணக்கிலே பயிர்ச்செய்கை நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்; கூட்டுறவேஎப்போதும் தமிழர்களின்—விசேஷமாய்க் கமக்காரரின் கையாட்சியாய் இருந்தது; கூட்டுறவைக்கொண்டு இப்பகுதித் திட்டங்கள்யாவற்றையும் சித்திகரமாய் முடிக்க விரும்புவதாகக் கூறினார்.

### புத்ததந்த ஆலயம்

கண்டிநகரிலுள்ள புத்ததந்தஆலயமாகிய தாலதமாளிகையைப் பாரிய தாக்கும்வேலை அடுத்தவருடம் புத்தஜயந்திவிழாவிற்குமுன் பூர்த்தியாக்கப்படவிருக்கிறது. இதற்கென அரசாங்கம் பத்துலட்சம்ரூபா உபகரித்திருக்கின்றது. மேலும் பணம் தேவைப்படுமானால் தாலதமாளிகைக்கென்று சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்துஎடுத்துச் செலவுசெய்யப்படும்.

### பொதுத்தேர்தல் ஆயத்தம்

பாராளுமன்றபொதுத்தேர்தல் நியாயப்பிரகாரமாகத் திடீரென்று நடத்தப்படுமென எதிர்பார்த்து எதிர்க்கட்சிகள் இப்போதே ஆயத்தப்படத் தொடங்கிவிட்டன. இவ்வருடம் மார்கழிமாதத்திலே அல்லது அடுத்தவருட ஆரம்பத்திலே பொதுத்தேர்தல் நடைபெறுமென அவைகள் எதிர்பார்க்கின்றன. அதனால் பல்வேறு எதிர்க்கட்சிகளிடையேயும் பொதுவான தேர்தல் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதற்காகச் சகலஎதிர்க்கட்சிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட தேர்தல்கம்மிற்றிஒன்றை நியமிக்குமாறு அவைகள்முயன்றுவருகின்றன.

### மாம்பழக் காட்சி

யாழ்ப்பாணப்பிரிவின் மாம்பழ உற்பத்தியாளர் சங்கமானது அநேக வருடங்களுக்குப்பின் இப்பொழுது மாம்பழக்காட்சிஒன்று நடத்த முன்வந்திருக்கிறது. இச்சங்க ஸ்தாபகர்களில் ஒருவரும், கமத்தொழில் உதவிப் பிரசார அதிகாரியுமான திரு. எம். ஆர். எம். செபரத்தினம் அவர்கள் அடுத்து நிகழும் ஆடிமாதம் 8-ம், 9-ம், 10-ந் திகதிகளிலே யாழ்ப்பாண முற்றவெளியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் களியாட்டவிழாவில் இந்த மாம்பழக் காட்சியை நடத்த முன்வந்திருக்கின்றார். இக்காட்சியிலே யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள ஒவ்வோர் காரியாதிகாரியின் பகுதிக்கும் தனித்தனி பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

### சமசமாஜகட்சிகளின் வேற்றுமை

லங்கா சமசமாஜகட்சி இருபிரிவுகளைக் கொண்டது. இவற்றில்ஒன்று, திரு. பிலிப் குணவர்த்தனவைத் தலைவராகக்கொண்டது. மற்றது டக்றர் என். எம். பெறேறாவைத் தலைவராகக் கொண்டது. இவற்றின் நாமங்கள் ஒன்றாய் இருந்தாலும் அவைகள் வேறுவேறான தலைவர்களையும், வேறுவேறான கொள்கைகளையும்உடையன. அரசியற்கொள்கைகள் ஒருபுறமிருக்க, தமிழும், சிங்களமுமாகிய மொழிப்பிரச்சினைசம்பந்தமாய் இவைகள் ஒன்றுடன்ஒன்று முற்றாக ஒத்துப்போவனவாயில்லை. திரு. பிலிப் குணவர்த்தனவைத் தலைமையாகக் கொண்ட சமசமாஜகட்சி அங்கத்தவர்களோ சிங்களப்பாஷை பேசும்பகுதிகளிலே சிங்களமும், வடமாகாணத்திலும், கீழ்மாகாணத்திலும் தமிழும் அரசாங்க பாஷையாக இருக்கவேண்டுமென நிற்கின்றார்கள். டக்றர் என். எம். பெறேறாவைத் தலைமையாகக்கொண்ட லங்கா சமசமாஜகட்சி அங்கத்தவர்களோ சிங்களம், தமிழ்ஆகிய இருபாஷைகளுமே அரசாங்க பாஷைகளாக இருக்கவேண்டுமென நிற்கின்றார்கள். இரு கட்சிகளில் விபரீதபோக்குகளில் இதுவும்ஒன்றாகும்.

### ஐந்துலட்சம் போத்தல்கள்

சாராயம்விட்டு அடைப்பதற்கென்று ஐந்துலட்சம்போத்தல்கள் அனுப்பிவைக்குமாறு ஜப்பானிலுள்ள கம்பெனி ஒன்றுக்கு நமதுஅரசாங்கம் அவசரகேள்விஒன்று அனுப்பியிருக்கின்றது. மதுவிலக்குக் கம்மிஷன்ஒன்றை நியமிக்கும்விஷயமாய் அதற்குரியகடமைகளைப்பற்றித் தீர்மானஞ்செய்த அன்று தினமே அரசாங்கம் சாராயப்போத்தல்கள் அனுப்பிவைக்குமாறும் அவசரகேள்வி அனுப்பிவைக்கலாயிற்று. இம்மாதமுடிவிற்குள் போத்தல்களைத் தீவிரமாக அனுப்பிவைக்கவேண்டுமென்று ஜப்பானியகம்பெனியை அது கேட்டிருக்கின்றது. மற்றும் பத்துலட்சம் சாராயப்போத்தல்கள்வரை உதவுவதை ஒப்பந்தத்திலே இலங்கைக் கண்ணாடித்தொழிற்சாலைக்குக் கொடுப்பதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

### இளைஞர்களின் லண்டன்பயணம்

திரு. எட்வின் செல்லர், திரு. வென்செஸ்லாஸ் இராசேந்திரம்எனும் இரு யாழ்ப்பாண இளைஞர்கள் பக்கக்காருடன்கூடிய மோட்டர்சைக்கிள் ஒன்றிலே இம்மாதம் 6-ந் திகதியன்று யாழ்ப்பாணத்திலிருந்து தரைமார்க்கமாக லண்டன்நகருக்குப் புறப்பட்ட செய்தி முன்னர் இப்பத்திரிகையில் வெளிவரலாயிற்று. இவர்கள்இருவரும் மறுநாள் இந்தியகரைபோய்ச் சேர்ந்து தனுஸ்கோடிவழியாக இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், திருச்சி, சேலம், பங்களூர், தேவநகர், பெல்காம், பூனா, பம்பாய்முதலாம் நகர்கள்கண்டு சென்ற 23-ந்திகதியன்று இகற்புராபோய்ச் சேர்ந்திருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இவர்கள் சென்றவழியிலே தேவநகர், பெல்காம் முதலிய இடங்களில் அங்கங்குள்ள குருப்பிரசாதிகளால் வரவேற்று வெகுமதிகளும் சங்மானிக்கப்பெற்றார்கள். பூனாநகரிலே இவர்கள் "டபிள்யு. டபிள்யு. பி." என அறியப்படுகின்ற உலகசகோதரத்துவஇயக்க அங்கத்தவர்களாலும், கமத்தொழிற்கல்லூரியில் பயின்றுவரும் சிலஇலங்கைமாணவர்களாலும் வரவேற்று உபசரிக்கப்பெற்றார்கள். இலங்கைமாணவர்கள் இருவருக்கும் 65 ரூபாகொண்ட ஓர் பணமுடிப்பை வெகுமதிபண்ணினார்கள். அங்குபிரசுரமாகும் "சகால்" என்ற மராட்டியபத்திரிகை ஸ்தாபனமும் இவர்களை அன்பாய்வரவேற்று உபசரித்தது. பம்பாய் நகரிலே "டபிள்யு. டபிள்யு. பி" எனும் சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களைவரவேற்று அங்குதங்கிநின்ற நாட்களில் இருவரையும் தங்கள்விருந்தாடிகளாக வைத்துக்கொண்டார்கள். இருவருக்கும் பலவெகுமதிகளும்வழங்கினார்கள். பம்பாயிலே திருடர்பயம் அதிகமென்றும், அங்குவசிக்கும் ஒவ்வொருவருமே திருடர்களையிட்டுப் பயப்பிராந்தி கொள்ளுகின்றனரென்றும், அதனால் வீட்டுக்கதவுகள் இரவுபகலாகச்சாத்திப் பூட்டப்படுகின்றனவென்றும், பம்பாயிலே ஒருஅணுவுடன் பத்துமைல்வரை றெயின்வண்டியில் பிரயாணஞ்செய்யலாமென்றும், அங்கு பகல் அதிகம்நீடியதென்றும், இரவு எட்டுமணிக்கும்வாசிப்பதற்குப்போதிய பகல்வெளிச்சம் இருக்கிறதென்றும் அவர்கள் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேற்றின்கண் நறுமணம் வீசிய தாமரைமலர்

( கே. எஸ். ஜி. பெரோரா )

டோனாமார்த்தா (Dona Martha) படுக்கையிலே மரணத்தறுவாயில் கிடந்தாள். பிறக்கவிருந்த குழந்தையைப்பற்றிய எண்ணத்தைக் கைவிட்டுத் தமதுமனைவியின் உயிரைப் பாதுகாக்கும்படி தொன் பொரங்தே கொன்சாகா (Don Ferrnte Gonzaga) வைத்தியர்களைக் கேட்டுக்கொண்டார். ஆனால், வைத்தியர்கள் அதற்குச்சிறிதுமே சம்மதப்படவில்லை. மரணத்தறுவாயிலிருந்த அன்னை தேவதாயாரைநோக்கி: "எனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையின்உயிரைக் காப்பாற்றினால் நான் அக்குழந்தையுடன் லொறேத்தோவுக்குத் திருயாத்திரை போவேன்" என்று ஓர்நேர்த்தி செய்தாள். இந்தநேர்த்தியின் பயனாக 1568-ம்ஆண்டு பங்குனித்திங்கள் 9-ந் திகதி அவ்வன்னைக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அலோஷியஸ் கொன்சாகாஎன்றநாமம் சூட்டப்பட்டது.

தனது உதரத்தில் பிறந்தமுதற்குழந்தை யேசுவின்திராட்சத் தோட்டத்தில் சேவைபுரிய வேண்டுமென்பது அலோஷியசின் தாயாருடைய எண்ணம். அவர் தகப்பனாரும் தேவபயபக்தியுள்ள ஓர் கத்தோலிக்கர். ஆயினும் தமதுமுதல்மகனை ஓர் யுத்தவீரனாக்க வேண்டுமென்ற எண்ணமே அவர்மனதில் குடிகொண்டிருந்தது. தேவநேசத்திலும், கற்பிலும் தாயார் தன்மகனுக்கு ஓர் முன்மாதிரிகையாக அமைந்தாள். அவள் ஓர்அரசிளங்குமாரத்தியின்கீழ் சேவைசெய்தபோதிலும் உலகஆசாபாசங்களிலும், மற்றும் உல்லாசங்களிலும் நேரத்தை வீண்போக்காது தனதுகற்பையும், கடவுள்மேல் தான்வைத்தஅன்பையும் வளர்த்துவந்தாள். தினந்தோறும் குழந்தைஅலோஷியசைத் தன்னருகில் வைத்துக்கொண்டு பக்தியுடன்செபிக்கக் கற்றுக்கொடுப்பாள். இவ்வாறு அவருடைய பத்தியுள்ளதாய் அவரைக் கடவுளுடையசேவைக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கச் சிறுபிராயமுதல் ஆயத்தப்படுத்தினாள்.

அலோஷியசை ஓர் யுத்தவீரனாக்க வேண்டுமென ஆசித்திருந்த அவர் தகப்பனார் அவருக்கு நான்குவயது நடக்கும்போதே யுத்தவீரனுக்குரிய பயிற்சியளிக்க ஆரம்பித்தார். 1572-ம் ஆண்டு ஆபிரிக்காவிலே துருக்கரை எதிர்த்து நடத்தியபோரில் ஸ்பானிய மன்னர் தொன் பொரங்தே என்பவரை மூவாயிரம் போர்வீரரைக் கொண்ட ஓர்காலாட்படைக்குத் தலைவனாக்கினார். அதனால் காசல் மாஜியோர் (Casel Mazgiore) என்னும் இடத்துக்குப் போக நேர்ந்தபோது தமதுமகன் அலோஷியஸையும் அழைத்துச்சென்றார். அவரும் சிறுவனாயிருந்தபோதிலும் யுத்தசம்பந்தமான சகலவிஷயங்களிலும் விருப்பைக் காட்டினார். ஒருநாள் வெடிமருந்துடன் விளையாடப்போய் மிகவும்காயப்பட்டார். ஆனால், போர்வீரருடன் பழகியதன் காரணமாக அவர்கள்பேசிய தகாத பாஷையையும் பேசப்பழகிக்கொண்டார். பின்பு அவர் வீடுதிரும்பியபோது அதேபாஷையை அங்கும்பேச ஆரம்பித்தார். அவரதுதாயாருக்கும், உறவினருக்கும் அது ஒருபெரிய வெறுப்பாயிருந்தது. அதனால், அப்பாஷை கூடாததென்று சொல்லி, திருப்பவும்அதைப் பேசவேண்டாமென்று அவர்தாயார் அவரைக் கேட்டுக்கொண்டாள். அதன்மேல் அவர் அதைப்பேசியதே கிடையாது. தினந்தோறும் செபிக்கும் வழக்கத்தையும், பிறர்சிநேகத்தையும் அலோஷியஸ் தனதுதாயாரிடமிருந்து கற்றுக்கொண்டார்.

தமதுபிள்ளைகளை அரசமாளிகைக்கு அனுப்பிவைக்கும்படி புளோறென்ஸ் நகரின் பிரான்சிஸ்இறைமகன் தொன் பொரங்தேயைக் கேட்டுக்கொள்ள, அவரும்அதற்கிசைந்து அலோஷியசையும், றுடல்போவையும் அனுப்பிவைத்தார். அப்போது அலோஷியசுக்குவயதுஒன்பது. அம்மாளிகையிலிருந்த அரசகுமாரர், குமாரத்திகளின் பழக்கவழக்கங்கள் கெட்டவைகளாய் இருந்தமையால் அங்கே கற்புக்கு இடமேயிராதென்றும், அங்கேசீவிப்பது தனதுகற்புக்கு ஓர்இடறலாய் இருக்குமென்றும் அலோஷியஸ்உணர்ந்தார். புளோறென்ஸ்நகர் ஆசனக்கோவிலிலே தேவதாயாரின் அழகியபடமொன்று இருந்தது. அவர்வழக்கப்படி தினந்தோறும் அப்படத்தின் முன்பாகப்போய்ச் செபித்துவரும்போது, ஒருநாள் தேவதாயாருக்கு ஓர்வெகுமதிஅளிக்க வேண்டுமென்றஎண்ணம் அவர்மனதில் உதித்தது. திரவியங்களிலே கற்பென்னும் விலைமதியாத்திரவியத்தைத் தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்க மனமேவப்பட்டார். அதனால் அன்றுமுதல் மரணபரியந்தம் அத்திரவியத்தைக் கண்ணை இமைகாப்பதுபோல் காத்துவந்தார். பன்னிரண்டாம்பிராயத்தில் வீடுதிரும்பினார். அங்கே வெகுநேரத்தைச் செபத்திலும், தியானத்திலும் கழித்தார். சிலதடவைகளிலே வீட்டுவேலைகாரர் அவர் இருந்த அறையின் திறப்புத்துவாரத்தின் வழியாய்ப் பார்க்கும்போது சின்னஅலோஷியஸ் ஓர் சிலுவையின் முன்பாக முழந்தாட்படியிட்டு, கைகள்இரண்டையும் விரித்தவாறு செபிப்பதைக்கண்டு கொள்வர். சாள்ஸ்பறோமியோ என்னும் மிலான் நகர் மேற்றிராணியார் ஓர்முறை கஸ்ரிலியோன் (Castilione) நகரைத்தரிசித்தார். அப்போது அலோஷியஸ் தனது பன்னிரண்டாவது பிராயத்தில் அம்மேற்றிராணியார் கையால் நற்கருணைபெற்றார்.

தொன்பொரங்தே காசல்என்னுமிடத்தில் இருந்தபோது தமது மனைவிமக்களை அவ்விடம்அழைத்தார். பிள்ளைகளுடனும், வேலையாட்களுடனும் மார்த்தாபுறப்பட்டாள். போகும்வழியிலே அவர்கள் சிஸ்ஸினோநதியைக் கடந்துபோக வேண்டியிருந்தது. அந்த நதியிலே வெள்ளம்பெருகி ஓடியது. அலோஷியசின் தாயார்சென்றவாகனம் ஒருசேதமுமின்றி மறுகரையைச்சேமமாக அடைந்தது. ஆனால், அலோஷியசும், றுடல்போவும், அவர்களது குருவானவரும் அமர்ந்திருந்தவாகனம் இரண்டாகஉடைந்தது. வாகனத்தை இழுத்துச்சென்ற குதிரைகள் ஒரு சேதமுமின்றி றுடல்போவைக் கரைசேர்த்தன. ஆனால், அலோஷியசும், குருவானவரும் வெள்ளப்பெருக்கில் அள்ளுண்டுசென்றனர். அப்போது தேவஅருளால் அவர்கள்சென்ற வாகனத்தின்பாகம் ஓர்மரக்கட்டையில் சிக்கியது. அதனால்இருவரும் ஒருசேதமுமின்றிக் கரைசேர்க்கப்பட்டனர். மற்றொருநாள் சுகவீனமாயிருந்தபடியால் நேரத்தோடுஅலோஷியஸ் படுக்கைக்குச்சென்றார். அவர்படுத்திருக்கும்போது மாலைச்செபம் சொல்லவில்லையேயென்றநினைவு அவருடையநித்திரையைக்கெடுத்தது. உடனே பணியாளனைப்பார்த்து மெழுகுவர்த்திஒன்று கொண்டுவரச்சொல்லி அதைப்படுக்கையருகில் வைத்துக்கொண்டு செபத்தைவாசிக்க ஆரம்பித்தார். வாசிக்கும்போதே அவரைஅறியாமலே நித்திரை அவரைமேற்கொண்டது. மெழுகுவர்த்திசடுதியாக அவருடையபடுக்கையில்விழவே, அது எரியத்தொடங்கியது. அலோஷியஸ் இதைஉணர்ந்து சத்தம்போடவே பணியாளர்சென்று நெருப்பைஅணைத்தனர். [illegible] பத்தால் வருந்தியபோதும் அலோஷியஸ் தனதுநாளாந்த செபங்களைச் சொல்லமறந்ததே கிடையாதென்பது இச்சம்பவத்தின்வாயிலாகப் புலனாகிறது. இவ்விதசேதங்களிலுமிருந்து கடவுள் அலோஷியசை ஒருகாயமுமின்றிக் காப்பாற்றினார். ஆகவே, கடவுள் அவரை ஓர்உந்நதஅந்தஸ்துக்கு அழைத்தாரென்று தெரியவருகிறது.

(வளரும்)

# "நீ கடைசிச்சல்லி உத்தரிக்கும் வரையும்..."

( சி. எஸ். நாயகம், ஸ்ரேஷன்மாஸ்றர், கெம்பாஸ் — மலாயா )

(சென்றவாரத் தொடர்ச்சி)

இதுவரை நரகம்உண்டென்னும் உண்மையைக் கண்டோம். அடுத்தபடியாக ஈண்டு உத்தரிக்கிறஸ்தலத்தைப்பற்றி ஆராய்வோம். "உத்தரிக்கிறஸ்தலம்" என்றால் என்ன? எந்த இராச்சியத்திலும், எந்தஅரசாங்கத்திலும் சட்டவிரோதமான குற்றங்களுக்குத் தண்டனைஉண்டு. தண்டனைக்குரிய இடங்களும்உண்டு. வேண்டுமென்று ஒருவன் கொலைசெய்கிறான். அந்தக்கொலையை அவனே செய்தானென்று அத்தாட்சிப்படுத்தப் படுமானால், அவனுக்கு மரணதண்டனை அல்லது சீவபரியந்தசிறைத்தண்டனை விதிக்கப்படும். அது கைபிழைபாட்டுக் கொலையென்று தீர்க்கப்படுமானால் மூந்திய இருதண்டனைகளுக்கும் அவன் தப்பியபோதிலும் ஏதோ அவன்செய்த குற்றம் கொலைக்குற்றமென்றமட்டிலே இளக்காரமானதண்டனை விதிக்கப்படுவான். இவ்விதம் மனிதர் செய்துகொள்ளும் எத்தனை எத்தனையோ சட்டவிரோதமான குற்றங்களுக்குத் தண்டனைவிதிக்கப்படுவதை நாம் கண்டுங்கேட்டும் வருகிறோம். இதுபோலவே, சர்வேசுரனுடைய இராச்சியமாகிய மறுமைச்சீவியத்திலும் நாம் உலகில் தேவகற்பனைகளுக்கும், அவர் ஸ்தாபித்த திருச்சபையின் கட்டளைகளுக்கும், மனச்சாட்சிக்கும் விரோதமாகக் கட்டிக்கொள்ளும் குற்றங்களுக்கு—பாவங்களுக்குத் தகுந்ததண்டனையைப்பெற இரண்டு சிறைச்சாலைகள் உண்டு. இவற்றில்ஒன்று, நரகம். இது நித்தியவேதனைச் சிறைச்சாலை. சதாகால சிறைத்தண்டனை - அதாவது மரணத்தின்பின் சதாகாலவேதனை விதிக்கப்பட்ட கெட்டுப்போனஆத்துமாக்கள் போயடையும் உறைவிடம். மற்றது, அநித்தியவேதனைச் சிறைச்சாலை. இதுதான் உத்தரிக்கிறஸ்தலம் என்று அழைக்கப்படும். மரணவேளை இஷ்டப்பிரசாத அந்தஸ்தோடிருந்து அற்பபாவத்தோடுமரிக்கும் புண்ணிய ஆத்துமாக்கள் போயடையும் உறைவிடம். இந்தஸ்தலம் உலகம்முடிகிறவரை நீடித்திருந்து உலகமுடிவோடு இறுதியடையும். உலகம் எப்போது முடியும்? எப்போது அழியும்? என்பது தேவனைப்பொறுத்த பரமரகசியம். இதை அவர் ஒருவர் தவிர வேறெவருமே அறியமாட்டார்கள். "அந்தநாளையும், நாழிகையையும் பற்றிப் பிதாஒருவரேயன்றி வேறெவனும், பரலோகத்திலுள்ள சம்மனசுகளும்முதலாய் அறியார்கள்" (மத். 24 : 36).

இன்னும் உத்தரிக்கிறஸ்தலம் என்றால் என்ன? சர்வேசுரனுடைய இராச்சியம் ஞானஇராச்சியம். ஆன்மஇரட்சணியத்தோடு சம்பந்தப்பட்ட இராச்சியம். "என்னுடைய இராச்சியம் இவ்வுலகத்துக்குஅடுத்ததல்ல" (அரு. 18 : 36) என்று அவரே வசனித்திருக்கிறார். இதன் ஞானகருமங்களைக் கவனிக்கும்பொருட்டு—இந்தஞானஇராச்சியத்தைப் பரிபாலனஞ்செய்யும் பொருட்டுச் சர்வேசுரனுடைய ஒருஞானஇராச்சியம் பூலோகத்திலும் உண்டு. அதுதான் பேதுரு என்னும் கற்பாறையின்மீது அவரால் ஸ்தாபிக்கப்பட்ட றோமான்கத்தோலிக்க சத்தியதிருச்சபை. மறுபக்கத்திலே இந்தஉலகம் ஓர் "போர்க்களம்" என்று வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு நடைபெறுவதாகக் கருதப்படும்போர் நீதிநியாயம், தயைதாட்சணியம், ஈனவிரக்கம் எதுவுமேயின்றிக் கம்யூனிஸ்தர்களைப் போலும், ஏனைய மண்ணாசைபிடித்த அரசாங்கங்களைப்போலும் நாடுகள் நகரங்களை ஒன்றின்பின்ஒன்றாய்ப் பிடித்து அடிமைப்படுத்தும் யுத்தம் அல்ல. ஆனால், இது ஓர் ஞானயுத்தம். ஆன்மசம்பந்தமான யுத்தம். கத்தோலிக்கர்சகலரும் ஞானஸ்நானத்தின்மூலமாய் இந்த ஞானயுத்தத்தில் ஈடுபடத் தங்கள்நாமங்களைப் பதிவுசெய்துகொண்ட ஞானயுத்தவீரர்கள்.

இந்தயுத்தத்திலே நம்மைவழிநடத்தும் தளபதிகள் நமதுதிருச்சபையின் ஞானஅதிகாரிகளே. சிங்கேறுகள் போலநின்று நாம்எதிர்த்துப்போராட வேண்டிய சத்துருக்கள் உலகம், சரீரம், பிசாசுஎன்னும் மூன்றுமே. இந்த ஞானயுத்தத்திலே நாம்கையாளவேண்டிய ஞானஆயுதங்கள் செப, தப, தேவதிரவிய அநுமானங்களே. நாம் வீரத்துவமாகநின்று எதிர்த்துப் போராட நமக்குப் போஷணையாயிருப்பது தேவநற்கருணையே. உலகபோர்க்களத்தில் நாம்காண்பதென்ன? குண்டுக்கிரையாய் இறக்கிறவர்களையும், காயமடைகிறவர்களையுமே. இறந்தபோர்வீரர்கள் இராணுவமரியாதைகளுடன் அடக்கஞ்செய்யப்படுகிறார்கள். காயப்பட்டவர்கள் இராணுவ ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டுசென்று சுகப்பட்டு எழும்பும்வரை பரிகரிக்கப்படுகிறார்கள். அவ்வாறே, நாம்செய்யும் ஞானயுத்தத்திலும் கொடியோன்எய்யும் கோர அக்கினிஆஸ்திரங்களுக்கு இலக்காகாமலும், இரையாகாமலும், காயப்படாமலும் போராடுவது இயலாக்கருமம். "எந்தஒருநீதிமானும் நாள்ஒன்றுக்கு ஏழுவிசை தவறுவான்" என்று திவ்விய இஸ்பிரீத்துசாந்துசர்வேசுரன் சாட்சி பகருகிறார். "மனமோ வேகமுள்ளதுதான். மாம்சமோ துர்ப்பலமுள்ளது" (மத். 26 : 41) என்று கர்த்தர்தாமே வசனித்திருக்கின்றார். இம்மட்டிலே நான்பெரும் புண்ணியவான்என்றாவது, அல்லது பாவியல்ல என்றாவது பூலோகத்திலெவரும் துணிந்துசொல்ல முடியாது. "தன்னிடத்தில் பாவமில்லையென்று எவன்சொல்லுகிறானோ அவன் பொய்யன்" (அரு. 1 : 8) என்கிறார் அர்ச். அருளப்பர்.

உலகில் இருந்துவருகிற கத்தோலிக்க விசுவாசிகளாகிய நாமெல்லாம் யுத்தசபையார்என்று அழைக்கப்படுகிறோம். ஏனெனில், நாம் இந்தஉலகில் சஞ்சரித்திருந்து மோட்சத்தை வெற்றிகொள்ளுமாறு முன்சொல்லப்பட்ட முச்சத்துருக்களோடும் அகோரயுத்தம் நடத்தவேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்தயுத்தத்திலே காயமடைந்தவர்கள் யார்? தங்கள் அந்தியவேளையிலே சாவானபாவத்தினால் தங்கள்ஞானஉயிராகிய—ஞானப்பொக்ஷமாகிய தேவ இஷ்டப்பிரசாதத்தை இழந்துபோகாது அற்பபாவங்களுடன்மரித்த புண்ணியஆத்துமாக்களே. இவர்கள் தங்கள்காயங்களிலிருந்து குணப்படும்பொருட்டுக் கொண்டுபோய்விட்டுப் பரிகரிக்கப்படும் ஞானஇராணுவ ஆஸ்பத்திரியே (Divine Military Hospital) உத்தரிக்கிறஸ்தலம். அவர்கள் தங்கள் காயங்கள் குணமடைந்ததும் தங்க

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### ஆடி 20-ந் திகதிவரை

இந்தோசீனுவிலே வடவியெற்னுமில் கம்யூனிஸ்த ஆதிக்கத்திலிருந்து தப்பிப்பிழைத்தோடப்பிரயத்தனிக்கின்ற கத்தோலிக்கமக்கள் இன்னும் ஓர்மாதத் தவணை அருளப்பட்டிருக்கிருர்கள். அதனுல் இந்தத் தவணைக்குள் — அதாவது, வருகிற ஆடி மாதம் 20-ந் திகதிக்குள் அவர்கள் சுதந்திர வியெற்னுமுக்கு ஓடித்தப்பிக்கொள்ள வேண்டியவர்கள். தவணை நீடிக்கப்பட வேண்டுமெனச் சர்வதேசயுத்த நிறுத்த கம்மிஷன் கேட்டுக்கொண்டது. அதனைக் கம்யூனிஸ்தர்களும் அங்கீகரித்துக் கொண்டார்கள். இவ்விதம் தவணை பின்போடப்பட்டிருப்பது இது இரண்டாம் முறையாகும். முதலாவது தவணையாக வைகாசி 13-ந் திகதி குறிக்கப்பட்டிருந்தது. சுதந்திர தென் வியெற்னுமுக்கு வலசைவாங்க விரும்பும் அகதிகளை ஏற்றிச்செல்லப் பிரான்சிய கடற்படைக் கப்பல்கள் ஹெய்ப்போங் துறைமுகத்துக்கப்பால் காத்துநிற்கின்றன.

### சீவந்தராக இருக்கின்ருர்

முன்னைநாள் கிழக்குப்புருஷியாவிலே ஒம்லான்ட் மேற்றிராசனத்தின் விக்கார் ஜெனறலும், இறந்துபோயினரென அறிவிக்கப்பட்டிருந்தவருமான 76 வயதுடைய மொன்சிஞ்ஞோர் அலோயிஸ் மாக்குவாட் சுவாமியார் சைபீரியாவிலே பெயிக்கல் வாவியிலுள்ள அலெக்சான்ட்ரெவ்ஸ் நகருக்குச்சமீபமான பலவந்த தொழில்முகாம் ஒன்றில் இன்னுமே சீவந்தராயிருக்கிருரெனப் பேர்ளின்நகரிலே செய்திகிடைத்திருக்கிறது. இவர் 1945-ம் ஆண்டு ஏதோ விசாரணைசெய்யப்படுவதற்கென்று சோவியற் ஜெனறல் ஒருவரால் கைதுசெய்யப்பட்டிருந்தார். அதன்மேல் இவர் திரும்பிவந்ததேயில்லை. இறந்துபோயினரென்றே திரும்பிவந்த கைதிகளால் சிலவருடங்களுக்குமுன் அறிவிக்கப்படலாயிற்று. ஆனுல், இவர் தற்போது அந்த முகாமிலிருந்து முதன்முறையாகக் கடிதம் எழுதியிருக்கின்ருர்.

### ஆஸ்திரியாவும் வத்திக்கானும்

பதினேழு வருடகாலம் பிறநாடுகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாயிருந்த ஆஸ்திரியாவுக்குச் சமீபத்திலே சுதந்திரம் அருளப்பட்டதைத்தொடர்ந்து, 1933-ம் ஆண்டு கைச்சாத்திடப் பெற்றுப் பிந்த ஐந்துவருடங்களின்பின் நாஸிகளால் ஒழித்துவிடப்பட்ட வத்திக்கான் உடன்படிக்கையைத் திரும்பவும் ஏற்படுத்துமாறு அந்நாட்டிலுள்ள மேற்றிராணிமார் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றனர். "நாஸிகள்செய்த சட்டங்களிலே அதிகமானவைகள் யுத்த முடிவில் அழிக்கப்பட்டபோதிலும் திருச்சபையைப் பாதிப்பதாய் அவர்கள்செய்த சட்டங்கள் அதிகமாக இன்னுமே நடைமுறையில் இருந்துவருகின்றன; சர்வதேச சட்டப்பிரகாரம் 1945-ம் ஆண்டிருந்த ஆஸ்திரியா 1933-ம் ஆண்டிலிருந்த ஆஸ்திரியாவைப் போல அதேசரியொத்ததாகும்; அதனுல் சிவில்சடங்கு இல்லாமலே திருச்சபை நிறைவேற்றிவைக்கும் மெய்விவாகங்கள், திருச்சபைப் பாடசாலைகளுக்கு மான்யம் உபகரிப்பது, அதன் சொத்துகளைத் திரும்பக் கையளிப்பதுபோன்ற கருமங்களைத் திருச்சபையும், அரசாங்கமுஞ் சேர்ந்து தீர்த்துக்கொள்வது அவசியமாகும்" என்று மேற்றிராணிமார் அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிருர்கள்.

### மனந்திரும்பிய புரொட்டஸ்தாந்தர்

பிரித்தானிய புதிய பாராளுமன்ற அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கும் கத்தோலிக்க பிரமுகர்களில் இருவர் புரொட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பியவர்கள். இவர்களிலே திரு. ஜோண் பிக்ஸ்-டேவிசன் அவர்கள் சிக்வெல்-ஒன்கர் தொகுதியின் "கன்சர்வேற்றிவ்" கட்சிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர். இவர் 1948-ம் ஆண்டு மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொண்டவர். "கதலிக் ஹெறல்ட்" எனும் பத்திரிகைக்கு அடிக்கடி விஷயதானங்கள் செய்துவருகிறவர். மற்றவர் டேவிட் பிறைஸ் அவர்கள். இவர் ஈஸ்ற்லி தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ளனர். 31வயதுடையரான திரு. பிறைஸ்அவர்கள் கேம்பிறிட்ஜ் யூனியனின் தலைவராய் விளங்கியிருந்தவர். தற்போது ஏகாதிபத்திய இரசாயன கைத்தொழில் ஸ்தாபன தலைவரின் உதவியாளராய் இருந்துவருகின்ருர். யேல் சர்வகலாசாலையில் படித்துவரும்போது இவர்மனந்திரும்பிக்கத்தோலிக்கதிருமறையிற் சேர்ந்துகொண்டார். இருவரும் பிரித்தானிய பாராளுமன்றப் பிரதிநிதிகளாய் இப்போதுதான் முதன்முறையாகத் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்ருர்கள்.

### ருஷியாவின் எதிர்கால சுவர்க்கம்

"வருகால சுவர்க்கமாகிய சைபீரியாவுக்குப் போங்கள்; உங்களுடன்வரக் குருமாரையும் நாங்கள் விட்டுத்தருவோம்." கிழக்கு ஐரோப்பாவிலே கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள நாடுகளிலிருந்து சைபீரியாவிற்போய்க் குடியேறும்படியாகக் கத்தோலிக்க இளந்தம்பதிகளுக்கும், தனிப்பட்ட பெண்மணிகளுக்கும் சோவியற்அரசுபோடும் தூண்டில்இரை இதுவாகும். இந்தத் தூண்டில்இரை பிரதானமாய்க் கமவேலைகாரருக்கே போடப்பட்டுள்ளதாகும். ஏனெனில், சைபீரியாவிலே அவர்களின் வேலை, நகர்ப்புறங்களில் பெருகிக்கொண்டுவரும் சனங்களுக்கென்று அதிகமான உணவு உற்பத்தி செய்வதாகும். ஆனுல், இளங்கத்தோலிக்க [illegible] இதுவிஷயமாய் [illegible] காண்பிப்போராயில்லை. அதற்கு முக்கியகாரணம், சமயசுதந்திரம் அருளப்படுமென்று சோவியற்அரசாங்கம் செய்துள்ளவாக்குறுதிமட்டிலே அவர்களுக்கு ஏற்பட்டுள்ளசந்தேகமேயாகும்.

### மிஷனரிய டக்றர்மாரின் கல்லூரி

பதுவைநகரிலே மிஷனரிய டக்றர்மாருக்கென்று அமைக்கப்பெற்ற சர்வகலாசாலைக் கல்லூரியின் முதல் மாணவர்கள் இந்தியாவிலும், ஆபிரிக்காவின் சிலநாடுகளிலும் மிஷன்குருமாருடன்சேர்ந்து ஒத்துழைத்துப் பல்வேறுமிஷன்களிலும் வைத்தியதொண்டாற்றி வருகின்ருர்கள். இந்தக்கல்லூரி இற்றைக்கு ஐந்து வருடங்களின்முன்னே திருன்ஸ் யோர்தான் நாட்டு மிஷன்களிலே ஓர்டக்றராகத் தமது முதல்வருடங்களைச் செலவிட்ட புரொபெசர் பிரான்சிஸ் கனேவா அவர்களால் அடியிடப்பட்டது. இந்தமிஷன்வைத்திய மாணவர்கள் பதுவைநகர சர்வகலாசாலையிலே வைத்தியசாஸ்திரம் பயின்றுகொள்ளுகிருர்கள். இவர்கள் எந்தவிதமான வாக்குத்தத்தமுங் கொடுப்பதில்லை. ஆனுல், மிஷன்நாடுகளிலே டக்றர்மாராகத் தொண்டாற்றுதற்கென்று தங்கள் வாழ்க்கையை அர்ப்பணஞ்செய்வதாகிய தருமார்த்த கடமையை ஏற்றுக்கொள்ளுகிருர்கள். இந்தச் சர்வகலாசாலைக் கல்லூரி இத்தாலிய மாணவர்களைத்தவிர, மிஷனரியநாடுகளிலிருந்துபோகும் சுதேச மாணவர்களையும் ஏற்றுப் படிப்பிக்கின்றது.

### இரு கத்தோலிக்க மந்திரிமார்

சுதந்திர மேற்கு ஜேர்மனியின் வெளிநாட்டுமந்திரி பதவியைப் பிரதமர் டக்றர் அடனேவர் அவர்கள் விட்டுவிலகவும், புதிய பாதுகாப்புமந்திரி ஒருவரை நியமனஞ்செய்யவும் தீர்மானித்தமையாலே சுதந்திர ஜேர்மன் அரசாங்கத்தின் இவ்விருஉயர்ந்த பதவிகளுக்கும் விசேஷப்பட்ட இருகத்தோலிக்க பிரமுகர்கள் தெரியப்பெற்றிருக்கின்றனர். இவர்களிலே கிறீஸ்துவ ஜனநாயக பாராளுமன்றகட்சியின் முதல்வரான திரு. வொன் பிறென்ரானே அவர்கள் வெளிநாட்டுமந்திரிபதவியையும், முன்னைநாள் பாதுகாப்புக் கம்மிஷனரான திரு. தியடோர் பிளாங்க் அவர்கள் பாதுகாப்புமந்திரி பதவியையும் ஏற்றிருக்கின்ருர்கள். புதிய வெளிநாட்டுமந்திரியார் மேற்கு ஐரோப்பிய நாடுகளுடன் சுதந்திர ஜேர்மனி நெருங்கிய ஐக்கியம் பூண்டுகொள்வதற்கான இயக்கத்திலே விடாப்பிடியாகவும், வியக்கத்தக்க விதமாயும் உழைத்துவந்தவர். ஓர் நியாயவாதியும், [illegible]வயதுடையவருமான இவர் 1944-ம் ஆண்டின் ஆடி மாதத்திலே சிறைவைக்கப்பட்டவர். யுத்தம்முடிந்தபின் கிறீஸ்துவ ஜனநாயக கட்சியை அடியிட்டவர்களில் இவரும் ஒருவர்.

### கம்யூனிஸ்தர்களின் முயற்சி

இந்தோசீனுவிலே கம்யூனிஸ்த வடவியெற்னும் நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்கள் பரிசுத்த ஸ்தானத்தின்மட்டில் கொண்டிருக்கும் விசுவாச பிரமாணிக்கத்தை ஒழித்துவிடவும், அவர்களின் வேத விசுவாசத்தைத் தளர்த்திவிடவுமாக அங்குள்ள கம்யூனிஸ்த அதிகாரிகள் பிறநாடுகளிலிருந்து—விசேஷமாய்ப் போலாந்து, பிரான்ஸ்முதலாம் நாடுகளிலிருந்து வரவழைத்த "முன்னேற்ற கத்தோலிக்கர்" என்ற வேதவிரோதிகளைக் கொண்டு வேலைசெய்து வருகின்ருர்கள். போலாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட "சுதேசாபிமான கத்தோலிக்கர்" கோஷ்டியைச்சேர்ந்தமூவர் ஒன்றுசேர்ந்து ஆறுவாரகாலமாக அந்நாட்டிலே சுற்றுப்பிரயாணஞ் செய்து அங்குவசிக்கும் கத்தோலிக்கமக்களைக் கம்யூனிஸத்துடன் ஒத்திணங்கிப் போகும்படியாய்ப் போதித்துவந்திருக்கின்றனர். பிரான்சிலே கத்தோலிக்க திருச்சபையைக் கண்டனஞ்செய்வதிலும், அதிற் பழிசுமத்துவதிலும் பேர்பெற்றவர்களான பத்திரிகைப் பிரதிநிதி ஒருவரும், பிரான்சிய இடதுசாரிச் "சமாதான" தூதுக் கோஷ்டியினரும் கூடிச்சென்று அங்குள்ள கத்தோலிக்க மக்களைக் கம்யூனிஸ்தமயமாக்க முனைந்து வேலைசெய்துவருகின்ருர்கள்.

### முடிமாலைகளுக்குப்பதில் தருமம்

வட ஆஸ்திறேலியாவைச் சேர்ந்த பண்டாபேர்க் நகரிலே பிரேதசேமங்கள் நடைபெறும்போது அனுப்பப்படும் பூமுடிமாலைகளுக்குச் செலவுசெய்யும் பணத்தைத் தருமகாரியங்களுக்குச் செலவுசெய்யும் வழக்கமொன்று தீவிரமாகப் பரந்துகொண்டு வருகின்றது. பிறிஸ்பேண்நகர் அதிமேற்றிராணியாரான தூஹிக் ஆண்டவர் இந்தவழக்கத்தை அங்கீகரித்திருக்கின்ருர். "பிரேதசேமங்களுக்கென்று பூமுடிமாலைகளும், புஷ்பங்களும் வாங்கியனுப்புவதிலே ஒருபெருந்தொகைப் பணம் விழலாகச் செலவிடப்படுகிறது. இது சனங்களை வருத்துவதான ஓர்வழக்கமாகிவிட்டது. இந்தப் பணம் சீவந்தராகவிருப்பாருக்குப் பயன்படுமானுல் எவ்வளவோ நன்மையாயிருக்கு"மென அவர் தெரிவித்திருக்கின்ருர். பண்டாபேர்க் நகரிலே இறந்தவர்களின் பிரேத சேமத்திற்கென்று புஷ்பங்கள்வாங்குவதற்குப்பதில் அவற்றிற்குச் செலவிடும் பணத்தைப் பல்வேறு கைங்கர்யங்களுக்கும் தருமகன்கொடையாக அவர்களின் நண்பர்களும், சுற்றத்தவர்களும் வழங்கிவருவது ஓர் வழக்கமாகிவிட்டது. இந்தவழக்கம் அங்கு இருவருடங்களுக்குமுன் ஆரம்பமாயிற்று. சமீபத்திலே ஓர் பிரேதசேமத்தின்போது மாத்திரம் மொத்தமாக 4,000 ரூபா சேரலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

**பொதுக்கருத்து:** டக்றர்மாரும், நோயாளர்களைப் பராமரிக்கும் நேர்ஸ்மாரும் கடவுள்முன்பாகத் தங்கள்பொறுப்பை உணரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** சீனதேச இளைஞர்களுக்காக மன்ருடிக்கொள்வது.


சத்தியவேத
**பாதுகாவலன்**
1955-ம் ஆண்டு
ஆனிமாதம் 30-ந் திகதி


# கேடுவரும் பின்னே...

— I —

நம்முடைய காலத்திலே கத்தோலிக்க திருச்சபையை எதிர்த்து, அதனை ஒர்கைபார்த்துவிட வேண்டுமெனக் கங்கணங் கட்டிநின்ற சர்வாதிகாரிகளில் ஹிற்லர், முசோலினி எனும் இருவரும் விசேஷப்பட்டவர்கள். ஜேர்மனியிலே ஹிற்லரும், இத்தாலியிலே முசோலினியும் இளைஞர்களையெல்லாம் தங்கள் பக்கமாகக் கவர்ந்து நடாத்திய திருவிளையாடல்களெல்லாம் கடைசியாக எதில்முடிந்தது? இறுதியாக அவர்களின் கதி என்னவாயிற்று? இவர்கள் இருவரும் தங்கள்சுயபலத்திலே நம்பிக்கைவைத்து, அண்டகோளங்களெல்லாம் அதிரும்படியாகத் தங்கள் ஆணையாசக்கரத்தைக் காண்பித்து, அகிலமுழுவதையும் நிலைகலங்கச் செய்தார்கள். ஈற்றிலே, இவர்களின் சண்டமாருதப்போக்கு — இடுதண்டம்பிடிதண்டமான போக்கு எதில் முடிந்தது? மற்ருேர் உலகமகாயுத்தத்தில் முடிந்தது. அதிலே இவர்கள் பாலூட்டிப் பழமூட்டிப் பகையூட்டிப் பராக்கிரமமூட்டிப் பயிற்றி வளர்த்த இளைஞர்களில் பெருந்தொகையானேர் இரத்தப்பலியானுர்கள். அந்தோ! அநியாயமாக யுத்தகளரிகளில் இறந்துபட்டார்கள். அவர்கள் சிந்திய குருதி நாடுகள்நகரங்களிலே ஆருகப் பெருக்கெடுத்தோடியது. அந்தஇரத்தப்பழி கடைசியாக அவர்களையும் பலியெடுத்தது. அவர்களின் இறுதியைக் கண்டது. ஆனுல், அவர்களுடன் கத்தோலிக்கதிருச்சபையும் இறுதிகண்டதா? இல்லை.

இந்தவீரர்திலகங்களைப்போன்று மெக்சிக்கோவிலும் கலேஸ் என்ற ஜனதிபதியும் சர்வவாதிகாரப் போக்குடையவனுய்க் கத்தோலிக்கதிருச்சபையுடன் போர்க்கறைகூவினுன். அதனைக் குழிதோண்டிப் புதைத்துவிடுவதாக விருது கூறினுன். அவனது வேதவிரோத கொடுங்கோன்மையாலே கொலையுண்ட குருமாரும், கத்தோலிக்கரும் சிந்தியகுருதியானது நாடெங்கும் ஆருய் ஓடியது. ஈற்றில், அவனுடைய கதி என்னவாயிற்று? ஓர்பெரும் கிர்ப்பாக்கியனுய் உயிர்மாண்டான். அவன் பூண்டோடு களையமுனைந்த திருச்சபையோ யாண்டும் இளமையுடன் திகழ்கின்றது. நிற்க, தென்னமெரிக்காவிலே ஆர்ஜென்ரீனுஎன்பது ஓர்கத்தோலிக்க நாடாகும். அடுத்துநிகழும் ஆடிமாதத்திலே சர்வதேச சற்பிரசாத மகாநாடு நிகழவிருக்கும் பிறேசில்நாட்டின் பக்கமாகஇருந்துவருவது. இதன் ஜனதிபதியாகத் தற்போது இருந்துவருகிறவர் ஜுவான் டொமின்கோ பெரேன்என்பவரே. இவருக்கும் சிலகாலத்தின்முன் எதிர்பாராதவிதமாகக் ஹிற்லர், முசோலினி, கலேஸ் என்ற வீரப்புருஷர்களின் சர்வாதிகாரப் பைத்தியம் பிடித்துக்கொண்டது. அதனுல், இவரும் தனது ஆணையாசக்கரத்தைக் கத்தோலிக்கதிருச்சபைக்குக் காண்பிக்கமுனைந்தார். ஹிற்லர், முசோலினி என்பவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முன்வந்தார். அந்நாட்டின் மத்தியபாடசாலைகளைச்சேர்ந்த மாணவர் மாணவிகளுக்கென்று 'யு. ஈ. எஸ்.' என்று அறியப்படும் யூனியன்ஒன்றை அடியிட்டுப் பந்தைய விளையாட்டுகள், ஆடல்பாடல்முதலாம் பலவித பொழுதுபோக்குகள், விநோத வேடிக்கைகளாலே யுவர்கள், யுவதிகளின் சமயப்பற்றைக் கெடுத்து, அவர்களைச் சமயவழிபாடுகளிலிருந்து புறம்போக்கிக் கொண்டுவந்தார். எதற்கும்மேலாய் இளம்பெண்களுக்கு மல்யுத்தம், மோட்டர்சைக்கிள் பந்தையஓட்டம் ஆதியனபயிற்றுவதிலும், இஷ்டம்போல அவர்கள் உண்டாட்டுக் களியாட்டு நடத்தும்படிசெய்வதிலும் இந்தப்பெரேன் ஜனதிபதி அதிகமாகஈடுபட்டு வரலாயினர். இவற்றின் விளைவாக அந்த இளம்பெண்கள் தங்கள் மானம் மரியாதையை இழந்துகொண்டு வருவதையும், அவர்களாலே கூறப்பட்ட திடுக்காட்டம் விளைக்கும் சம்பவங்களையும் அவர்களின் பெற்றேர்அறியவந்தனர். ஆத்திரமேலிட்டவர்களாய் வெகுண்டெழுந்தனர். தங்கள் பிள்ளைகளைத் தடுத்தனர். கட்டுப்பாடுகள் செய்ய முற்பட்டனர். இதன்விளைவாக ஜனதிபதி பெரேனின் விபரீதபோக்கிலே பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டது. அவருடையஎடுப்புப் படிப்படியாகச் சரியத்தொடங்கியது. ஆவேசங் கொண்டார். காமாலைக்கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளென்றவாருய் அவருக்கும் கத்தோலிக்கதிருச்சபையே மஞ்சளாகத் தோன்றியது. அது நாட்டில் இருக்கப்போய்த்தானே—அதற்குச் செல்வாக்கு இருக்கப்போய்த்தானே தனது எடுப்புக்குப் பங்கம் ஏற்பட்டதென்று அதன்மீது சென்ற புரட்டாசியிலே போர்தொடுத்தார். சர்வாதிகாரப்போக்கிலே நடவடிக்கைகள்எடுத்தார். கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்றவாருயிற்று இன்று அவர்பாடும்.


காதுக்குக் கேட்கும்
மிகமிக இன்பமான ஒலி,
புகழ் மொழிதான்.


# குருவே வாழ்க!

[ அ. பர்னபாஸ் ]

அன்று "குருவே வாழ்க!" என்று யூதாஸ் பூங்காவனத்தில் கூறினுன் அன்ருே! ஆனுல், அவன்நெஞ்சிலே நஞ்சு இருந்தது. நாவிலே வஞ்சகம் இருந்தது. அவர் வாழவேண்டுமென்ற நோக்கம் அவனிடம் இருக்கவில்லை. எனினும், அவரை 'வாழ்க' என்று வாழ்த்தினுன். அச்சொற்களின் நோக்கப்படியல்ல, ஆனுல், அவற்றின் உண்மை அர்த்தத்தின்படியே இன்றும் ஆண்டவர் எம்மிடையே வாழ்ந்துகொண்டுதான் இருக்கிருர். அதுமட்டுமல்ல, தம்முடைய பிரதிநிதிகளாக ஆயிரமாயிரம் குருமாரையும் நியமித்து, அவர்களை வழிநடத்தியும் வருகின்ருர்.

குருமாரின் பெருமையையும், குருத்துவத்தின் மகிமையையும் உள்ளபடியே வர்ணிப்பது நம்மால் முடிந்தகாரியமல்ல. யேசுவின் சேவைக்காகச் சகலவிதமான ஆசாபாசங்களையும் துறந்து மெய்வழிநாடியவர்கள் அவர்கள். உலகம் உண்டானநாள் முதல் இதுவரை எத்தனையோ குருமார் இறந்துபோயிருக்கின்றனர். அவர்களின் மொத்தம் எத்தனைபேரென்று நம்மால் கணக்கெடுக்க முடியுமா? அது எவ்வளவோ கடினமானவேலை. அதேபோல் கடினமானவேலைதான் துறவிகளின்பெருமையை விளக்குவதும். "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" என்ற குறளில் திருக்குறள் ஆசிரியர் இக்கருத்தை வெகு தெளிவாக எடுத்துக் கூறுகிருர்.

கிழக்கு ஆபிரிக்காவிலே 19,700 அடியிலுள்ள கிளிமாஞ்சரோ என்பது உலகில் ஒருஉயரமான மலை. அதைவிட உயரமானது, சீனுவிலுள்ள தியான்ஷன்மலைகளிலே 24,000 அடியிலுள்ள கான்தேங்ரி. அதைவிட உயரமானது தர்க்கிஸ்தானத்துப் பமீரிலே 25,500 அடியிலுள்ள தாகார்மா. அதைவிட உயரமானது மத்திய ஆசியாவைச்சேர்ந்த காரக்கோர மலைகளிலே 28,500 அடியிலுள்ள டாப்சாங். அதைவிட உயரமானது இந்தியாவில் இமயமலையிலே 29,200 அடியிலுள்ள எவறெஸ்ற் சிகரம். அதைவிட உயரமானது மாட்சிமை நிறைந்த குருத்துவம்.

குருமார் ஆண்டவரின் ஊழியக்காரர். இறைவனின் பரமஇரகசியங்களை நமக்குப் பகிர்ந்து அளிப்பவர்கள். குருமாரின்கூட்டம் நம்மிடையே இல்லாவிடின் நாம் ஆயனில்லாத ஆடுகளைப்போல் சிதறுண்டுபோய் இருப்போம். ஆண்டவர் நமக்கு இலவசமாக அளிக்கும் தேவதிரவிய அனுமானங்களாகிய அருட்கொடைகளைப்பெருமல்போகும் துர்ப்பாக்கியசாலிகளாய் இருப்போம். ஒழுக்கம், நேர்மை, பிறர்நேசமாகிய சிறந்த பண்புகள் இல்லாமல் இயற்கையே கடவுளென்றும், கட்டுப்பாடில்லாது காட்டுமிராண்டிகள் போல் வெறிபிடித்து அலைவதுதான் மனிதசுதந்திரமென்றும் பித்தலாட்டமாகப் பேசிக்கொண்டிருப்போம். பகுத்தறிவு, சீர்திருத்தமென்ற சொற்களுக்கு விபரீத அர்த்தங்களைக் கற்பித்து மக்களிடையே வெறுப்பையும், பகைமையையும் கிழப்பிவிட்டுக்கொண் டிருப்போம்.

இன்று குருமார் செல்லாக்காசுகளாக—சொத்தைக் கனிகளாக—சமுதாயத்தின் குப்பைகளாக—கழிவுகளாக மதிக்கப்படலாம். ஆனுல், ஒருகாலம்வரும். அப்போது அவர்களுடையவாழ்வின் லட்சியத்தையும், தியாக சிந்தையையும் உலகம்உணரும். அவர்களை இன்று வெளியேற்ற வேண்டுமென்று கூக்குரலபோடும்கூட்டம் அன்று 'குருமாரே நீவிர் வாழ்க!' என்று மகிழ்ச்சியோடு கோஷமிடும்.

— முன்னேடி.

# செய்யத் தகாதவை

தேவாலயத்தில் உன் நேத்திரங்களை நாலாபக்கமும் அலையவிடாதே. உனது தேவ அன்பர் இருக்குமிடத்தில் அவரை நோக்கியவண்ணம் இருப்பதே உசிதம். திவ்விய நற்கருணைப் பேழையைஉற்றுப்பார். செபிக்கையில் கண்களை அடக்கிக்கொள். சிநேகிதன் ஒருவனேடு பேசும்போது இங்குமங்கும் திரும்பிப் பார்ப்பாயா?

●

பூசைநேரத்தில் கோவில்செலவுககாகத் தண்டல்செய்யப்படுகிறது. உன்னுல் இயன்றதை உண்டிற்போடத் தயங்கவேண்டாம். வெற்றிலை, பாக்கு, சுருட்டு, புகையிலைக்கு ஒருநாள் செலவிடுகிறதைப் போலாகிலும் கொடுக்கமுடியாதா?

●

சிலுவையடையாளம் வரையும்போது ஈயைவிரட்டுகிறதுபோல் செய்யாதே. நிதானமாகவும், மெதுவாகவுஞ் செய். முழங்காளிலிருக்கும்போது யார் முன்னுல் இருக்கின்ருயென்பதை ஞாபகப்படுத்திக்கொள்.

●

கோவிலுக்குத் தாமதித்துச் செல்லாதே. சினிமாப் படம் பார்க்கப் போவதாயிருந்தால் தாமதித்துப் போவாயா? அப்படியானுல் கடவுள் மட்டிலே ஏன் இந்தமரியாதைக் குறைவு?

●

பிரசங்கம் நடக்கும்போது அவசியமின்றி இருமாதே. அப்படிச்செய்வது பிரசங்கத்தை அவமதித்ததுபோலாகும். அது தொற்றுநோய்போல் மற்றவர்களையும் இருமச்செய்யும். நீயே கவனித்துப்பார்.

●

பூசைநோத்தில் பொம்மைபோல் சும்மாவிராதே. கவனமாகப் பூசைகாண்பதுதான் அறிவுள்ளமனிதனின் ஒழுங்கு. பூசையைப்பற்றி வாசித்துத் தெளிவுறுவது ஏற்ற உதவி. தெளிந்தமனதோடு பூசையில் பிரசன்னமாயிருப்பது சலிப்பூட்டாது. சந்தோஷங்கூட்டும்.

●

ஞாயிறன்றுமட்டும் பூசை காண்சது போதுமென்று வாளாவிராதே. மற்றநாட்களிலும் சாவகாசமிருப்பின் பூசைக்குப்போகத் தவருதே. அரசனின்பேட்டிகாணச் சந்தர்ப்பங்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிடைத்தால் எவ்வளவு ஆர்வத்துடனும், சுறுசுறுப்புடனும் ஏக முயல்வாய். இதோ மன்னாதிமன்னன் யேசுபெருமான் பீடந்தனில் வந்திறங்குகின்றார். அவரைத்தரிசிக்க அசட்டையாயிருக்கலாமா?

●

ஆபாசப் பத்திரிகைகளைவாசியாதே. அப்படிச்செய்வது வெட்கத்துக்குரிய காரியம். மேலும் ஆபத்துக்கு இடங்கொடுப்பதாகும். உனதுநடத்தையுங் கெடும். உன்பேருஞ்சீருங் கெடும்.

●

பூசை முடிந்ததும் இனிஎல்லாம் முடிந்ததென்று சொல்லிக்கொண்டு குருவானவர் பீடத்திலிருந்து அகலுமுன் நீ கோவிலைவிட்டு வெளியேறாதே. அது கடவுளுக்கு அவமரியாதை காட்டுவதாகும்.

— வேளாங்கண்ணிக்குரலொலி

# சபதஞ் செய்வோம்

(எம். வி.)

பூதலத்தில் தன்னுயிர்க்கே உயிராய்ப்பெற்ற
புத்திரனை யெமக்காகப் பலியாய்ஈந்து
வேதனைகள் ஈட்டிகளாய்ப் பிளந்தபோதும்
வெள்ளமெனத் தன்கருணை பொழிந்துநாளும்
ஆதரமாய் நின்றுலகை ஆளுமெங்கள்
அன்னைமரி வன்னமடுப் பதியில்சென்று
பாதமலர்ப் பங்கயத்தைப் பணிந்துவாடும்
பாவிகள்நாம் கூடியொரு சபதஞ்செய்வோம்.

●

சத்தியமே உருவாகி வந்தஞானச்
சன்மார்க்க நெறியதனை அறியாராகிக்
கத்தனடி பாவாது கலங்குகின்றோர்
காசினியில் உன்பெருமை காணவைப்போம்
எத்திசையும் நாகவிஷம் போலவோங்கி
ஏறுகின்ற நாஸ்திகத்தின் கொடுமைபோக்கிப்
பத்தியொடு பரம்பொருளின் நினைவையூட்டிப்
பாருலகை மோட்சமெனத் திகழவைப்போம்.

●

இத்தனைநாள் நாம்வாழ்ந்த ஈனவாழ்வு
இன்றுடனே நீக்குமென மாசுபோக்கி
உத்தமராய் மாறிடுவோம் பகைவரோடும்
ஒற்றுமையாய் அன்புடனே கூடிவாழ்வோம்
எத்தினமும் மாமரியே! குடும்பமாக
இரத்தினமா மணிமாலை யோதிவாழ்வோம்
முத்திநெறி நாம்நடந்து முடிவில்லாத
மோட்சமுடி பெற்றிடவே அருள்வாயம்மா!

## ஸ்ரீவேதநாயகம் பல்டானோ, எம். பி. ஈ.

பேசாலைவாசரும், பலராலும் நன்கறியப்பட்டவரும், ஓர் உத்தம கத்தோலிக்கருமான ஸ்ரீ வேதநாயகம் பல்டானோஅவர்கட்கு மாட்சிமைதங்கிய மகாராணியார் எம். பி. ஈ. என்ற மகிமைப்பட்டம் அளித்துள்ளாரென்ற செய்தியானது பொதுவாக இலங்கைவாழ் பரதகுலத்தவருக்கும், சிறப்பாக மன்னார்ப்பகுதிக் கத்தோலிக்கருக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதாயிற்று. இராணிமாளிகையில் கவர்ணர்—ஜெனறலின் கரங்களினால் மகிமைப்பட்ட விருதைப் பெற்றுத்திரும்பிய ஸ்ரீ வேதநாயகம் பல்டானோ அவர்கட்கு மன்னார்ப்பகுதி முழுவதிலுமே மகத்தான வரவேற்பு அளிக்கப்படலாயிற்று.

அவற்றுள் இங்குமுக்கியமாய் எடுத்துக்கூறத்தக்கது, அவரின்ஜனன பதியான பேசாலையில் அளிக்கப்பட்ட பொதுசன வரவேற்பாகும். 11-6-55 சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அவர் பதின்மருக்குமேற்பட்ட குருப்பிரசாதிகள், மற்றும்அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பிரபலஸ்தர்கள் சமேதராய்ப் பேசாலையின் பிரதானவீதியை வந்தடையவே அங்குகுழுமியிருந்த பேசாலைமக்களின் சார்பாக ஸ்ரீ எலியாஸ் பீரிஸ்அவர்கள் பட்டதாரியை வரவேற்று மாலையணிவித்தார். அதன்மேல் நாதசுரவாத்தியங்கள் இசைக்க, குடைகொடி, நிலபாவாடை முதலிய வரிசைகளுடன் வங்காலை, பேசாலைக் கிராமச்சங்கத்தலைவர்கள் சமேதராய்ப் பிரதானவீதியினூடு அவர் அழைத்துச்செல்லப்பட்டார். வழியெங்கணும் மலர்மாலைகளும், சரிகைமாலைகளும் மாறிமாறி அவர்கழுத்தில் வீழ்ந்தவண்ணமிருந்தன. ஊர்வலம் அமலோற்பவவெற்றிநாயகியின் ஆலயத்தை யடையவே, அதிவண. ஏ. லெபோன் சுவாமியவர்களால் குரவர் இருவர் உதவிபுரியத் "தெதேயும்" என்னும் தேவதோத்திர கீதம்பாடித் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

பின்னர் ஆலயமுன்றிலில் பிரதிமைப் படம் பிடிக்கப்பட்டு, ஆங்கு குழுமியிருந்தோர் யாவரும் அவரது இல்லினையடையவே அங்குபரிமளிப்பான தோட்டஉபசாரணை நடைபெறலாயிற்று அத்தருணம் வண. எஸ். பீற்றர்சுவாமியவர்களும், வங்காலைக் கிராமச்சங்கத்தலைவர் ஸ்ரீ ஜோண்மார்க் அவர்களும் பட்டதாரியைப் பாராட்டிப் புகழ்மாலைசூட்டினர்.

அதன்மேல் அவர் பிரபலஸ்தர்களும், பொதுமக்களும் புடைசூழப் பாத்திமா பாடசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அப்பாடசாலை மைதானத்தில் நவமாகஅமைந்த அலங்காரப் பந்தரில் பிரமுகர்கள் சமேதராய் அமர்த்தப்படவே ஸ்ரீ சின்னத்தம்பி டயஸ்அவர்களால் வாழ்த்திதழ் வாசித்தளிக்கப் படலாயிற்று. அத்தருணம் ஆசிரியர் ஸ்ரீ. பர்ணபாஸ் அவர்கள் எழுந்து: "பேசாலையே உன்புகழே புகழ்; ஏனெனில், இன்று நீ மாநகரமாய் விட்டாய்" என்ற தலைப்புடன் கூடிய சொற்பெருக்கொன்றை நிகழ்த்தலாயினர். இவர்புகழ் அரசினர்க் கெட்டியது; அவர்கள்இவரைச் சமாதானநீதிபதி யாக்கினர்; மரணவிசாரணை அதிகாரியாக்கினர்; பாப்பரசர் இவர்புகழையும், சேவையையும் அறிந்தார்; "புறோ எக்கிளேசியா எத் பொன்ரிபிச்சே" என்றவிருதால் இவரைக்கௌரவித்தார்; கடைசியாக இங்கிலாந்தின் இராணியே இவரை அறிந்தார்; பிரித்தானிய சாம்பிராச்சிய அங்கத்தவராக்கினார் எனப் புகழ்ந்துரைத்தார். ஸ்ரீ சூசை லம்பேட்அவர்கள் பேசாலைவாசிகளின் சார்பில் அன்பளிப்புச்செய்தார். இடையிடையே பாமாலைகளின் இன்னிசைகளும் ஒலித்தன. பெண்பாடசாலை மாணவிகளின் கண்கவர்நடனம் கூட்டநிகழ்ச்சிகளைப் பரிமளிக்கச்செய்தன. ஈற்றில், விழாநாயகர்எழுந்து, எனக்கல்ல ஆண்டவரே, எல்லாம் உமக்கேயுரியது; ஏனெனில், நீரேஇவற்றை எனக்களித்தீர் என்பனவாகப்பேசித் தமக்களிக்கப்பட்டவற்றிற்காக நன்றிதெரிவித்துநின்றார். ஈற்றில், தேசீயகீதத்துடன் பொதுசனவரவேற்புவைபவம் இனிதே சமாப்தியாயிற்று.

பேசாலைப்பெண்பாடசாலை மகளிர் மன்றத்தினரால் 15-6-55 புதன்கிழமையும், பாத்திமாபாடசாலை மாணவர் மன்றத்தினரால் 16-6-55 வியாழக்கிழமையும் ஸ்ரீ வேதநாயகம் பல்டானோ அவர்கட்கு வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

— நிருபர்

---

● பரிசுத்த பாப்பரசரின் பாதுகாவலரான அர்ச். ஈயூஜினியாரின்திருநாள் அன்று வியாழக்கிழமை வத்திக்கான்இராச்சியத்திலே கொண்டாடப்படலாயிற்று. அன்றுதினம் ஓர்பூஞ்செண்டுடனும், ஒருகூடைபழங்களுடனும் தங்கள் "பேதுருவின்சல்லி"யைக் கொண்டுவந்த றோமைஇளைஞர்களின் பிரதிநிதிகளுக்குப் பரிசுத்த பிதா பேட்டியருளலாயினர்.

## சேவைநலம் பாராட்டுவிழா

ஊர்காவற்றுறைவித்தியாதரிசி திரு. ஈ. சி. பொன்னுத்துரை அவர்களின் சிறந்தசேவையைப் பாராட்டுமுகமாக அப்பகுதிக் கத்தோலிக்க ஆசிரியர்கள் சென்ற 26-6-55 ஞாயிற்றுக்கிழமை அர்ச். அந்தோனியார் கல்லூரி முன்றிலில் ஓர்பகிரங்க உபசாரணை நடத்தினர். அதற்குத் தலைமைதாங்கிய கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரர் அதிவண. ரி. ஏ. ஜே. மதுரநாயகம் சுவாமிகள் பேசியபோது: தாம் முகாமைக்காரர் பதவியேற்ற ஐந்துவருடகாலத்திலும் ஓர் வித்தியாதரிசியின் பிரிவுஉபசாரம் ஒன்றிலே பங்குபற்றுவது இதுதான் முதல்முறையென்றும், திரு. பொன்னுத்துரை அவர்கள் இந்தக்கண்ணியத்திற்கு மிகவும் தகுதிவாய்ந்தவரென்றும் கூறினார். திரு. எஸ். வைத்திலிங்கம்பேசுகையில் திரு. பொன்னுத்துரை அவர்களின் சித்திக்குக்காரணம், அவரின் சுயநம்பிக்கையே என்றார். செல்வி மரியதாசம்மா அவர்கள், பாலர்கழகக் கல்விக்குப் புத்துயிர்தந்த வித்தியாதரிசி பொன்னுத்துரை அவர்களே யென்று விதந்தோதினர். இவ்விழாவின் சிறப்புக்காகக் கல்லூரிஅதிபர் வண. பி. ஜே. சீவரத்தினம் சுவாமியவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டாரென்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

— நிருபர்

---


### விளம்பரம்

அடைக்கலநாயகி சகாயநிதிச்சங்கம்

யாழ்ப்பாணம்

ஆங்கில, தமிழ்அறிவுடைய உபலிகிதர்ஒருவர் இச்சங்கத்துக்குத் தேவைப்படுகின்றார். அதனால், மனுப்பண்ணுவோர் 1955-ம்ஆண்டு ஆடிமாதம் 10-ந்திகதிக்கு முன்னதாக மனுப்பண்ணிக்கொள்ளவேண்டும். தெரிவுசெய்யப்படுவோர் சங்க நிபந்தனைகளுக்கமைந்து 100/ (நூறு) ரூபா பிணைகட்டவேண்டும். ஆரம்பவேதனம் மாதம் 30/ (முப்பது) ரூபா.

சங்கக் காரியதரிசி

4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


## பிரிவுஉபசாரவிழா

ஏழாலை, அர்ச். இசிதோர்கலாசாலையில் கடந்த 36 ஆண்டளவாய் ஆசிரியத்தொண்டாற்றிய திருமதி யோசேப்பு கிறிஸ்ரீனா அவர்களுக்கு மேற்படிபாடசாலையின் புதிய, பழைய மாணவர்களால் நிகழும் ஆனித்திங்கள் 19-ம்நாள் ஓர் உன்னதமான பிரிவுஉபசாரவிழா கொண்டாடப்பட்டது. அன்றுமாலை 6 மணியளவில் பிரியாவிடைநாயகி அர்ச். இசிதோர் ஆலய முன்றிலிலிருந்து பாடசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கே அலங்காரமாய் அமைக்கப்பட்டிருந்த மேடையில் அமர்ந்ததும் கட்டளைக்குரவர் வண. ஜோண் சிங்கராயர் சுவாமியவர்கள் தலைமையின்கீழ் விழா ஆரம்பமானது. சுவாமியவர்கள் முன்னுரைகூறிநின்றனர். பூமாலைகளும், பாமாலைகளும்சூட்டி மாணவர்கள் அவரைஅன்போடுபசரித்தனர். வாழ்த்துப்பத்திரங்களும், தட்சணைகளும் வழங்கப்பட்டன. அவரது பழைய மாணவர்களாய்த் தற்போது ஆசிரியர்களாகவிளங்கும் பலர் அவரது குணசீலங்களைப் பாராட்டி இனியசொற்பொழிவுகளாற்றினர். பிரியாவிடைநாயகி எல்லோருக்கும் நன்றி கூறிநின்றார். ஈற்றில் பாடசாலை மாணவர்களால் நடத்தப்பெற்ற கதம்பக்கச்சேரியுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

---

## மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**பூசைப்பரிசாரகரின் பக்திச்சபை:**

இந்தப் பக்திச்சபையின் பாதுகாவலரான அர்ச். ஞானப்பிரகாசியாரின் திருநாளைமுன்னிட்டு இம்மாதம் 20-ந்திகதியன்றுமாலை வேஸ்பரும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டு, அடுத்தநாள் 21-ந் திகதியன்று காலை கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் E. L. வம்பேக் சுவாமியவர்களால் பாடற்பூசையும் நிறைவேறியது.

**அந்தோனி என்னும் நாமங் கொண்டவர்கள்:**

தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா விசாரணைப்பங்கைச்சேர்ந்தவர்களில் அந்தோனிஎன்னும் நாமங்கொண்டவர்கள் ஒன்றுசேர்ந்து இம்மாதம் 21-ந்திகதி பிற்பகல் 6-30 மணிக்கு அர்ச். அந்தோனியார் திருநாளைச் சுற்றுப்பிரகாரத்துடனும், வேஸ்பர், திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துடனும் மிகஆடம்பரமாய்க் கொண்டாடினார்கள்.

**இரண்டாம்முறை அரங்கேற்றம்:**

தாண்டவன்வெளி பரிசுத்த அமலோற்பவ பக்திச்சபைச் சிறுமிகளால் "யாமினி" அல்லது "கற்பின் மகிமை" என்னும்நாடகம் அரங்கேற்றப்பட்டமை வாசகர்களுக்கு ஞாபகமிருக்குமென எண்ணுகிறோம். இந்நாடகத்தை இரண்டாம்முறையாகவும் அரங்கேற்றும்படி பலபெரியார்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தமையால் 25-6-55 சனிக்கிழமை இரண்டாம் முறையாகவும் அர்ச். மிக்கேல் கல்லூரிமண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது. மேலும் 3-7-55 ஞாயிற்றுக்கிழமை திரிகோணமலையிலும் இந்நாடகத்தை அரங்கேற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெற்றுவருகின்றன.

—நிருபர்

---

● சலவாயுக்குண்டு போடப்பட்டால் தனது விலையேறப்பெற்ற உடைகள் சேதமடைந்து விடுமேயென்று கவலைப்படும் ஓர் அமெரிக்கமாது தனது உடைகளை வைத்துப் பாதுகாப்பதற்கென்று நியூயோர்க்நகருக்குச் சமீபமான பர்க்ஷயர்மலையிலே 800 அடி ஆழத்தில் பணப்பெட்டகம் ஒன்றைத் தயாரிக்கச் செய்திருக்கின்றாளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெந்தெக்கோஸ்துவின் பின் 5-ம் ஞாயிறு

### நிருபம், 1 பேதுரு 3 : 8—15

பிறர்சிநேகம கிறீஸ்துவன் கட்டாயம் அனுசரிக்கவேண்டியதென்று முன் வற்புறுத்தப்பட்டதுபோல, இப்பூசையிலும் வலியுறுத்தப்படுகிறது.

பிறர்சிநேகத்தை அனுசரிப்பது எப்போதும் இலகுவாயிராது. தீமைசெய்வதும், பிறரைத் துன்புறுத்துவதுமே தொழிலாகக் கொண்டுள்ளனர் சில மனிதர். இப்படியிருந்தாலும் "சகோதர நேசம், சாந்தம், மனஉருக்கம்" உங்களிடமிருக்கவேண்டுமென்கிறார் தலைமை அப்போஸ்தலர். பிறர் தீமை விளைத்தாலும் நீங்கள் நன்மைசெய்யுங்கள்; அவர்கள் சபித்துத் திட்டினாலும் நீங்கள் ஆசீர்வதியுங்கள்.

அநீதரும், அக்கிரமிகளும் இப்பொழுது வெற்றியீட்டி விட்டோமென்று குதூகலங் கொள்ளக்கூடும். அவர்களுடைய வெற்றியும், குதூகலிப்பும், கொம்மாளங் கொட்டுதலும் எல்லாம் சோழகத்தின்முன் பனிப்புகாராகும். "ஆண்டவருடைய கண்கள் நீதிமான்கள் மேலும், அவருடைய செவிகள் அவர்களுடைய செபத்தின்மேலும் நோக்கமாயிருக்கின்றன. தின்மையைச் செய்கிறவர்கள்மேல் கர்த்தர் கோபமாயிருக்கிறார். அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும் அல்லவா?

நீங்கள் நன்மையை நாடுகிறவர்களாயிருந்தால் நினைவிலும், சொல்லிலும், செயலிலும் எல்லோருக்கும் நன்மையை விரும்புகிறவர்களாயிருந்தால் எல்லாம் நன்மையாய் நிகழும்.

வேதவிரோதிகளால் நீதியினிமித்தம் உபத்திரவப் படுகிறீர்களா? அது சர்வேசுரனுடைய ஆசீர்வாதம். உங்கள் பாக்கியமென்று உணருங்கள்.

"பிறருடைய மிரட்டலுக்குப் பயப்படாதேயுங்கள்." ஏன்? எல்லாம் உங்களுக்கு நன்மையாய் மாறும்.

உங்கள் உள்ளத்தில் கிறீஸ்துநாதர் இருக்கும்போது ஏன்பயப்படவேண்டும்?

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

## அனாதைகளின் தாய்

அநேகாயிரம் வருடங்களுக்குமுன் நடந்த ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்துகின்ற தேவதாயின் அழகான படமொன்று ஸ்பெயினில் உள்ள ஓர் புராதன தேவாலயத்தில் இன்னும் காணப்படுகின்றது. அப்படத்திலே தேவமாதா ஒருவறிய சிறுகுழந்தையைத் தமது கரங்களில் ஏந்திக்கொண்டு இருக்கிறாள். அப்பிள்ளையின் கவுணும், சப்பாத்தும் கிழிந்த வண்ணமாகச் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. அப்படத்தை "அனாதைகளின் மாதா" படம் என்று அழைத்து வருகிறார்கள்.

ஸ்பானிய தேசத்தில் ஓர் குக்கிராமத்தில் ஓர் வறியதாய் தனது சிறு குழந்தையுடன் ஓர்சிறு குடிசையில் வசித்து வந்தாள். அச்சிறுமியின் பெயர் மரியா என்பது. சில காலத்தின்பின் தாய் கண்பார்வை மங்கிக் குருடியானாள். சின்ன மரியாதான் அவளைக் கையில் பிடித்து வீடுவீடாகக் கொண்டுதிரிந்து தருமம்இரந்து வருவாள். தன்னால் செய்யக்கூடிய உதவியெல்லாம் அவளுக்குச் செய்து வருவாள். ஒவ்வொருநாளும் கோவிலுக்குப் போய் மாதா சுரூபத்தின்முன் இருவரும் முழந்தாளிட்டுச் செபமாலை செபிப்பார்கள்.

நாட்கள்பல செல்லச்செல்லத் தாயின் நிலைமை பரிதாபத்துக் குரியதாய் இருந்தது. ஒருநாள் மரியாவின் தாய் பாயும்படுக்கையுமாக விழுந்தாள். விழுந்தவள் திரும்ப எழுந்ததேயில்லை. குருவானவர் வந்து அவளுக்குக் கடைசிச் சடங்குகளை நிறைவேற்றினார். சிறிதுவேளையில் அவளுடைய ஆத்துமம் பரகதி சேர்ந்தது. அங்கு கண் திறபடவே யேசுநாதரையும், தேவமாதாவையும் தெளிவாகக் கண்டு ஆனந்திக்கும் பாக்கியம் பெற்றாள்.

சின்னமரியாவின் நிலைமையென்ன? ஆருமற்ற அனாதையாக அவள் விடப்பட்டாள். அடுத்தவீட்டு அம்மாளிடம் வேலைக்கு அமர்த்தப்பட்டாள். அவள் மரியாவைக் கொண்டு அதிகம் கடினமாக வேலைகள் செய்வித்தாள். இந்தக் கஷ்டமான நேரத்தில் மரியா தன் தாயை நினைத்துக் கவலைப்பட்டு அழுவாள். அவ்வாறாக, நத்தால் நாட்கள் நெருங்கிவந்தன. தாய் சீவனோடு இருக்கும்போது நடுச்சாமப் பாடற் பூசைக்குப் போய்வந்தவள் இப்போது தனிமையாய் என்ன செய்வதென்று அறியாது கலங்கினாள்.

சிறுவர் சிறுமிகள் கூட்டம் கூட்டமாகத் தெருக்களில் கிறிஸ்மஸ் பாட்டுகள் படிக்கும் சத்தம் கேட்கவே அவர்களுடன்சேர்ந்து அவளும் கோவிலுக்குப்போனாள். கோவிலில் இருந்தபோது உண்டானபரலோக ஆனந்தத்தினால் தனது கவலையைச் சற்றே சாந்தியாக்கினாள். பின்னர் பூசை முடிந்ததும் எல்லோரும் சந்தோஷ ஆரவாரங்களுடன் வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். சின்னமரியா மாத்திரம் கோவிலில் தனிமையாக இருந்தாள். வழக்கமாக அம்மாவுடன் தான் செபமாலை சொல்லிவந்த அந்தமாதாவின் சுரூபத்தின்முன்பாக முழந்தாட்படியிட்டாள்.

'ஓ! தேவதாயே, என்னுடைய அம்மா மோட்சத்துக்குப் போனபின் எனக்குத் தாய்இல்லை; நீரே என்னுடைய உண்மையான தாயாய் இரும்; என்னைக் கைவிடாதேயும்" என்று செபித்தாள். அவள் செபித்ததை எவருமே காணவில்லை.

அடுத்தநாட்காலை கோவில் சக்கிறிஸ்தான் [illegible] சுரூபங்களுக்குமுன் வெளிச்சம் ஏற்றினர். என்ன அதிசயம்! மாதாசுரூபம் மரியாவை ஏந்தி அணைத்தபடி இருந்தது. அவளும மாதாவின் மார்பில் சார்ந்தபடி புன்முறுவலுடன் மோட்சம் அடைந்து விட்டாள். சக்கிறிஸ்தான் இந்தக்காட்சியைக் கண்டதும், தானும் முழந்தாளிட்டு மாதாவை வணங்கினார். 'ஓ! தேவதாயே, எல்லா அனாதைகளுக்கும் நீர் தாயாய் இரும்" என்று மன்றாடினார். இந்தச்செய்தி ஊரெங்கும் பரக்கவே அத்தேசத்தில் மாதா பத்தி பன்மடங்கானது. அதிலிருந்து "அனாதைகளின் மாதா" என்றபெயர் அச்சுரூபத்திற்கு உண்டாயிற்று.

— M. J. M.



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

நீங்கள் கத்தோலிக்க பள்ளிகளில் படிக்கவேண்டிய பிரதான பாடம் வேதம். வேதபாடம் படித்துச் சோதனையில் கண்ணியமாய் அரங்கேறிவிடுகிறீர்கள். ஆனால், கலாசாலையைவிட்டு வெளியேறியபின் முன்கற்ற வேதப்படிப்பு உபயோகப்பட வேண்டும்.

வெளியுலகில் நடமாடும்பொழுது வேதத்தைப்பற்றிப் பலர் சிலகேள்விகளைக் கேட்கக்கூடும். சில சந்தர்ப்பங்களில் உங்கள் மனதில் சந்தேகங்கள் எழவுங்கூடும். அவ்வேளைகளில் பள்ளியில் படித்தது உபயோகமாக வேண்டும்.

சில கேள்விகளுக்கு விடை தெரியாமலும், சந்தேகங்களைத் தீர்க்க முடியாமலும் திணறக்கூடும். அத்தருணங்களில் அறிந்தவர்களிடங் கேட்டும், விளக்க நூல்களைப் படித்தும் சந்தேகங்களை நிவிர்த்திசெய்யலாம்; வினாக்களுக்கு விடையிறுக்கலாம்.

ஆனால், ஒன்று மட்டும் உங்கள்மனதில் இருக்கட்டும். உங்களுக்கு விடை தெரியவில்லையென்றால் "விடையே இல்லை" யென்று முடிவுகட்டி விடாதீர்கள்.

உங்கள்கண் குருடென்றால் உலகம்முழுவதும் இருள் நிறைந்ததாகி விடுமா? உங்கள் அறியாமை ஒருபுறமிருக்க, எதிரியின் நியாயம் சரியென்று ஒப்புக்கொள்வது மகாதப்பிதம்.

உதாரணமாக, நமதுசமூகம் சீர்திருந்த வேண்டிய அவசியமுண்டு. எக்கொள்கைகளைக் கடைப்பிடித்துத் திருத்த வேண்டியது? சமுதாய சீர்திருத்தத்திற்கு அவசியமான கொள்கைகளை— நியாயத்திற்குப் பொருத்தமான கொள்கைகளைத் திருச்சபைத் தலைவர்கள் பலகாலும் கூறியிருக்கிறார்கள். இன்றும் கூறுகிறார்கள். இவைகளை நாம் அறியவேண்டும். அறிந்து அவைகளைப் பரப்பவேண்டும். யந்திர நிபுணர், வழக்கறிஞர், வைத்திய நிபுணர், வங்கி நிபுணர், நகராள் கழகத்தினர் முதலியோருக்குத்தான் இந்தஅறிவு விசேஷமாக வேண்டும். இதைப் பரப்பவும் அவர்களுக்கு அரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

நீங்கள் கல்விகற்று இப்படியான ஏதாவது ஒரு நிலைபரத்தில் இருக்கும்பொழுது கத்தோலிக்க சமுதாயக் கொள்கைகளை அறிந்து அவைகளைப் பரப்பி நமது சமுதாயத்தை அக்கொள்கைகளின்படி அமைத்துத்தர முயற்சி செய்யுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணா.

> "உண்மையான மனிதன் எவரையுமே துவேஷிப்பதில்லை" —நெப்போலியன்

## திருப்பலி

மயிர்க்குட்டி வண்ணாத்திப் பூச்சியாக மாறுகிறது. மீன் சினையிலுஞ் சிறியதான ஆலம்விதை ஆலாவிருட்சமாக வளருகிறது. அதுபோலப் பழைய ஏற்பாட்டில் நடந்த மிருக, உணவுப் பலிகளுக்குப் பதிலாக ஆண்டவர் நமக்குத் திருப்பூசைப் பலியைத் தந்திருக்கிறார்.

கடைசிஅசனவேளை யேசு பழைய, புதிய ஏற்பாட்டுக்குரிய இருபலிகளையும் ஒப்புக்கொடுத்தார். அன்று பாஸ்கா(கடந்துபோன)ப்பண்டிகை. செம்மறியாட்டுக்குட்டியை அப்ப, இரசத்துடன் ஒப்புக்கொடுத்தார். இவைகளுக்குப் பதிலாக வேறோர் உத்தம பலிப்பொருளைத் தந்தார். அது அவருடைய சரீரமும், இரத்தமும். கடைசி இராப்போசனவேளை இந்தக் கொடையை—காணிக்கையை – முதல்தடவையாக நிறைவேற்றினார். அதுதான் முதற்பூசை.

இப்போதுதிவ்வியபூசையில், காணிக்கை வேளையில் அப்பமும், இரசமும் ஒப்புக்கொடுக்கப் படுகின்றன. ஆனால், அப்பமும், இரசமும் ஆண்டவருடைய சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகின்றன. யேசுவினிடமாக நிற்கும் குருவானவர் அம்மாற்றத்தைத் தேவவசீகரவேளையில் நிறைவேற்றுகிறார். யேசுவின் சரீரமும், இரத்தமுந்தான் பலிப்பொருள்.

யேசு கடைசி இராப்போசனவேளையிற் சொன்னதுபோலக் குருவானவரும் "இது என்சரீரம்..." "இது என்இரத்தத்தின் பாத்திரம்" என்று சொல்லுவார். அப்பமும், இரசமும் யேசுவின் உயிருள்ள சரீரமாகவும், இரத்தமாகவும் மாறுகின்றன. குருவானவர்யேசுவைப் பரமபிதாவுக்குக் காணிக்கையாக்குவார். அது திறமையான கொடையாகும். ஓர் திறமையான பலியுமாகிறது. அப்பத்தின்மேல் "இது என்சரீரம்" என்றுசொல்லியவுடன் குருவானவர் முழந்தாள்மடித்து ஆராதிக்கிறார். பின்பு சனங்கள்காணும்படி திருஅப்பத்தை உயர்த்துகிறார்.

அதுபோலவே "இது என்இரத்தத்தின் பாத்திரம்" என்று சொன்னவுடன் முழந்தாள் மடித்துப் பின் அதை உயர்த்துகிறார்.

தேவவசீகர வேளையிலும், எழுந்தேற்றநேரத்திலும் நடக்கிறதென்ன? நீங்கள் கல்வாரிக்குன்றில் நின்றிருந்தால் என்னத்தைக் கண்டிருப்பீர்களோ, அதேகிருத்தியந்தான் இங்கும் நிறைவேறுகிறது. இங்கும் இவ்வேளையிலும் யேசு குருவும் பலியுமாகிறார்.

சிலுவையில் யேசு மெய்ம்மையாக இரத்தஞ் சிந்தினார். மாணித்தார். அதை இரத்தஞ்சிந்திய பலியென்கிறோம். பூசையில் யேசு நம்கண்காணத்தக்கதாக மாணிப்பதில்லை. இரத்தஞ் சிந்துவதில்லை. இது இரத்தஞ் சிந்தாத பலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியும் பேரனும்

— ஜெயம் —



பாட்டி, பாட்டி! பறந்திடும்
பறவைக் கப்பல் தெரியுமா?
கேட்ட தில்லைப் பேரனே!
கிளியைப் போல இருக்குமா?

●

பாட்டி, பாட்டி! பாடிடும்
பாட்டுப் பெட்டி தெரியுமா?
நாட்டுக் கடகப் பெட்டிபோல்
நல்ல ஓலை போட்டதா?

●

பாட்டி, பாட்டி! பேசிடும்
படங்கள் பார்த்துப் பழக்கமா?
கேட்டுக் குத்தான் வழியிது
காலம் கெட்டுப் போச்சுது!

●



பாட்டி, பாட்டி! உனக்குத்தான்
பழைய கதைகள் தெரியுமா?
நீட்டி இருந்து கேளப்பா
நீள மாகச் சொல்லுவேன்.

## உண்மை நண்பன்

முத். யோசெவ் காவாஸோ என்பவர் மரணத் தருவாயில் இருந்த ஏழை ஒருவனுக்கு உதவி செய்துகொண்டிருந்தார். அவனோ தன்னை எல்லாரும் கைநெகிழ்ந்தார்களென்றும், தன்னைக் கவனிப்பார் ஒருவருமே யில்லையென்றும் குறைகூறினான். அப்போது முத். யோசெவ் சொல்லுவார்: "நீர் தனியன் அல்லர்; எல்லாருமே கைவிட்டபோதிலும் உம்மைக் கைநெகிழாத ஒருவர் இருக்கிறார்; அவர்தாமே வந்து உம்முடன் தங்க விரும்புகிறார்" என்றுகூறிச் சிலுவையைக் காட்டினார்.

"உலகில் என்றும் உம்முடன் இருக்கும் உண்மை நண்பன் இவர்; இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வேறுசிநேகிதர் ஓடிவிடுவார்கள். இவரோ உன்னிடம் வருவார்; உன்னுடன் இருந்து உனது பயணம் சித்தாத்திரையாய் முடியும்வரை காத்திருப்பார்" என்றார்.

அப்போது அந்த ஏழை மனிதன் சிலுவையைத் தனது கையிலேந்தி, அழுகையுடன் அதை முத்தமிட்டுக் கொண்டிருந்தான். தன்னுடன் அவரை வைத்திருந்து, சமாதானமாய் மரிக்குமளவும் அவன் அதைக் கைவிடவேயில்லை.

---

## கமலாவின் பதில்

பலவர்ணக் கொடிகளும், தோரணங்களும், நிறவிளக்குகளும் கண்களைப் பறிக்கின்றன. ஒலிபெருக்கிகள் என்றுமிலாக்கோஷத்துடன் முழங்குகின்றன. தேவகானமோ எனத்தகும் கீதங்கள் வாடைக்காற்றிலே மிதந்து வருகின்றன. வீதிகள், வீடுகள் எங்கும் சிறுவர் சிறுமிகளின் ஆனந்தக் களிப்பு. ஆண்களும், பெண்களும் மிகுந்த பாபரப்புடன் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

தெருவின் ஓர்பக்கமாக இரண்டு மாடிகளை உடைய ஓர்பெரிய வீடு. அதில் எங்கும் அமைதி கதவின் அருகில் மின்மினிப் பூச்சியை ஒத்த ஒருசிறிய விளக்கு. இருண்ட சமையல் அறையில் சோறு பொங்கும் சப்தம்தவிர வேறுசப்தம் இல்லை. அடுப்பின் அருகிலே உட்கார்ந்திருந்தாள் செசிலி. அவள் மனதில் ஏதேதோ நினைவுகள் எல்லாம் தோன்றி மறைந்தன. சில சமயங்களில் தன்னை அறியாமலே வரும் கண்ணீரைத் தன் முந்தானையால் துடைத்துக் கொள்வாள்.

அங்ஙனமாக, "என்ன அம்மா! இன்னும் சமையல் முடியவில்லையா? இராச்செபமும் முடித்து விட்டேனே" என்று சொல்லிக் கொண்டே மலர்ந்த முகத்துடன் தாயிடம் ஓடிவந்தாள் கமலம். "இல்லை மகளே, இன்னும் முடியவில்லை" என்று கலங்கிய கண்களுடன் பதில் கூறினாள் தாய்.

"அம்மா! அந்த இரஞ்சிதத்தின் அப்பா அவளுக்கு ஒருஅழகான பட்டு உடுப்புத் தைத்துக் கொடுத்திருக்கிறார்; ஆ, என்ன அழகு! அதை நான் தொட்டுப் பார்த்தேன்" என்றாள் கமலம்.

தாய் இதைக் கேட்டதே தனது உள்ளத்தில் பொங்கி எழுந்த கவலை பொறுக்க முடியாது விம்மிவிம்மி அழுதாள். அவளுடைய இரு கண்களினின்றும் நீர் தாரைதாரையாய் வழிந்தது. தாயின் நிலைமையைக் கண்டு வருந்திய கமலம், "ஏன் அம்மா..." என்றாள் சிறுக நடுங்கிய குரலில். செசிலி பதில் ஒன்றும் சொல்லவில்லை. கடந்தகால இன்பவாழ்க்கை பற்றிய நினைவுகள் அவள் உள்ளத்தை வாள்போல் அறுத்தன. சென்ற ஆண்டு இருந்த ஆரவாரமும், அகமகிழ்ச்சியும் எங்கே? இந்தவருடம் எனது மகளுக்கு ஓர்துண்டுச் சீலைதானும் வாங்க வகையில்லையே என்று அழுதாள் அவள்.

ஏன் அம்மா இப்படி அழுகிறீர்கள்? என்று முகத்தை மூடிக்கொண்டிருந்த தன்தாயின் கைகளைப் பிடித்து இழுத்தாள் கமலம். "எல்லாம் நமது நிலைமையை எண்ணித்தான் கண்ணே! இன்று உனது அப்பா இருந்தால் இந்த வறுமை ......" என்று சொல்லும்போதே துக்கம் அவள் தொண்டையை அடைத்துவிட்டது. தாயின் கவலை மகளையும் சிறிது வருத்தியது. இருவரும் சிறிதுவேளை மௌனமாய் இருந்தார்கள்.

மகளுக்கு வயது பத்தே. ஆயினும் தெளிந்த ஞானமுள்ள அவள் தாயைப் பார்த்து, "அம்மா! யேசு எங்கே பிறந்தார்? ஊருக்கு வெளியே மாடுகள் உறையும் ஓர்குகையிலே அல்லவா? அவரைக் கந்தைத் துணிகளால் தானே மூடினார்கள்; ஆனால், அப்படியான வறுமையில் அவர் நம்மை வைக்கவில்லையே அம்மா" என்றாள் கமலம். மகளின் சொற்களைக் கேட்டதாய் தன் மகளை அணைத்து முத்தமிட்டாள்.

மேரி தேரேசா நீற்று,
கலவன்பாடசாலை,
முன்னக்கரை.


---

● பிலடெல்பியாவிலுள்ள தெலிபோன்பெண்கள் தங்களுடைய சம்பளத்தில்வரும் சில்லறைகளைச்சேர்த்து நாலாயிரம்டலர் விசுவாசவிருத்திக்காக ஒற்ரா மேற்றிராணியாருக்கு உதவியிருக்கிறார்கள். அற்ப நோவுமில்லாத இவ்வழியை எல்லவரும் பின்பற்றலாம்.

## கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கம் 7-8-55 — 11-8-55

கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞானஒடுக்கமானது இம்முறை ஆவணிமாசம் 7-ந்திகதி சாயந்தரம் இளவாலைகன்னியர் தாபனத்தின் கண்ணே வழமைபோல ஆரம்பமாகும். ஆசிரியைகளின் வசதிகோரி ஆவணி மாசத்திற்குப் பின்போட்டுநடத்துவதால் அநேகஆசிரியைகள் சமுகமளித்து நயனடைய வசதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், தக்கஇத்தருணத்தைக் கைவிடாது ஞானஒடுக்கத்தில் பங்குபற்றுமாறு எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள். பங்குபற்றுவோர் தாபனத்தலைவியவர்கட்கு அறிவிக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Revd. Mother Superior,
Holy Family Convent,
Ilavalai.



## 5-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு: 25—12—27 இறப்பு: 5—7—50

எனது அருமைக்குமாரர் திரு. இம்மனுவல் துரைரத்தினம் செல்வத்துரை அவர்கள்மறைந்து இன்றோடு (5-7-55) ஐந்து ஆண்டுகள் நிறைவாகின்றன.

பாவிபயந்த மணியெட் டிலையோவெம்
ஆவித் திரைய னணைந்திட்டால்—பூவில்
துறவோ ரறவோருற் றுரைக்கெஞ்
சிற்றேம்
மறவா திதவு மவற்கு.

இதனைக் கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நித்திய இளைப்பாற்றியை அவருக்குக் கொடுத்தருளும் சுவாமீ...சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவர் பிரிவால் துயருறும்

தாய்: ஸ்ரீமதி மு. செல்வத்துரை.
பாரியார்: ஸ்ரீமதி செ. துரைரத்தினம்

சகோதரர்கள்: இராசரத்தினம், நாகரத்தினம், தம்பிரத்தினம், சங். சிஸ்றர் மேரி லுமினா (நேசரத்தினம்), தங்கரத்தினம், யோகரத்தினம், அரியரத்தினம், சண்முகரத்தினம்.

R. I. P.

---

## நன்றியறிந்த தோத்திரம்

ஒருபோதும் சரிவராதென்று நான் நினைத்தவிஷயம் யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் வல்லபமுள்ள மன்றாட்டினாலும் அனுகூலமானது. சதாசகாயமாதாவின்நாமம் எங்கும் புகழப்படுவதாக. இன்னும் நான்நினைத்திருக்கிற காரியங்கள் அனுகூலமாக அந்தப்பரிசுத்த இராக்கினி கிருபைபுரிவாளாக.

தே. அ.

## அறிவித்தல்

பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம்

இளவாலை சேந்தான்களம் றோட்டில் இருந்து பண்டத்தரிப்புத் தெல்லிப்பழை றோட்டை இணைக்கும் றோட்டுவேலைக்கு இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பம செய்வோர் 7-7-55 காலை 9மணியிலிருந்து சாயந்தரம் 4மணிக்குமுன் அதற்குரிய விண்ணப்பப் பத்திரத்தை ரூபா 50கட்டிப் பெற்றுக் கொள்ளவேண்டும். விண்ணப்பங்கள் 8-7-55 பகல் பத்துமணிக்குமுன் வடபகுதி உதவிஸ்தல ஸ்தாபனஅதிபர் கந்தோரிலும், எனது கந்தோரிலும் கிடைக்கக்கூடியதாகப் பதிவுசெய்த தபாலில் அனுப்பிவைத்தல்வேண்டும். உதவிஸ்தல ஸ்தாபன அதிபரால் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரராமட்டுந்தான் விண்ணப்பிக்கலாம். மற்றும் விபரங்கள்யாவும் எனது கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

சு. நாகமுந்து,
தலைவர்,
பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம்.

---

## திரு. எஸ். ஜே. ஞானப்பிரகாசம் அவர்களின் மரண அறிக்கை

மிருசுவில்வாசரும், 33 வருடங்களாக நல்லூர்மீசாம் பாடசாலைகளில் உதவிஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாம்சபையில் ஒருவரும், நொச்சிக்குளம் தலைமைஆசிரியர் திரு. பி. எஸ். நீக்கலஸ்அவர்களின் மாமனாரும், நொச்சிக்குளம உதவிஆசிரியை திருமதி மேரிறோசம்மா நீக்கலஸ், சங். சிஸ்றர் மேரி சென்போல், நீர்ப்பாசன பகுதியில் கடமையாற்றும் திரு. ரி. ஜீ மரியஇராசரத்தினம், அரசினர்மருந்துச்சாலையில் கடமையாற்றும் திரு. ஜி. என். ஸ்ரானிஸ்லாஸ் என்பவர்களின் தந்தையாருமாகிய திரு. எஸ் ஜே. ஞானப்பிரகாசம்என்பவர் எவரும் எதிர்பாராதவிதமாக இம்மாதம் 2-ந் திகதி மரணத்திரையினுள் மறையலானார். இறக்கும்போது இவருக்குவயது 68. இவரது பூதஉடல் மறுநாள் சாயந்தரம் அழகியபேழையில் வைக்கப்பட்டு, வெண்பரிபூட்டியஇரதத்தில் அமர்த்தப்பட்டு சங். கன்னியாஸ்திரிகளும், அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாம்சபையாரும், சுற்றத்தவர்களும் தங்கள்பிரியஅன்பருக்கு இறுதிமரியாதை காட்டிச்செல்ல, மிருசுவில் கட்டளைக்குரவர் வண. ஸ்டம்பதிசுவாமியவர்களும், வண. பி. ஏ. அல்பிறெட் சுவாமியவர்களும் துக்கசங்கீதம் பாடிச் சென்று சேமக்காலையில் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்க, அன்னோரின் துக்கபிரலாபங்கள்மத்தியில் பூமதானம்செய்யப்பட்டது. இவர்குணநலம், செயல்நலம், மனோநலம் பொலிந்த கண்ணியபுருஷர். இவரைஇழந்து துன்புறும்பாரியார், பிள்ளைகள், இனசனர்முதலியோருக்கு எமது அனுதாபமும்உரியதாகுக. இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடிக்கொள்ளுமாறு வண. குருப்பிரசாதிகள், கன்னியாஸ்திரிமார், மற்றும்இனசனர், அன்பர்கள் அனைவரையும் பரிவாகக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

R. I. P.

---

● கெய்றோநகரிலே எகிப்திய வெளிநாட்டுமந்திரியாரின் காரியாலயத்திலே இராசீயமூலப்பிரதிகளின்பரிபாலன தலைவராய் இருந்துவருகிறவரான ஜனுப்அலி ஷாக்கிஅவர்கள் பரிசுத்தஸ்தானத்தினிடமாக எகிப்திய அரசாங்கத்தின் புதிய பிரதிநிதியாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

● ஆஸ்திரேலியமக்கள் பெருந்தேநீர்க் குடிகாரர்களெனத் தற்போது பெயர்வாங்கி யிருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வோர் போசனவேளையிலும் தேநீர் பருகுகின்றார்கள். அத்துடன் போசன இடைவேளைகளிலும் நன்றாகத் தேநீர்அருந்துகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாநா சங்கதிகள்

● இமயமலையிலே உலகில் இது வரைஎவராலுமே ஏறி வெற்றிகொள்ளப்படாத மகாஉந்நத மலைச்சிகரமாகிய கன்செஞ்ஜுங்காசிகரத்தை டக்றர் சாள்ஸ் ஈவான்ஸ்அவர்களைத் தலைமையாகக்கொண்ட பிரித்தானியமலையேற்ற கோஷ்டியொன்று சமீபத்தில் ஏறி வெற்றிகொண்டிருக்கிறது. இந்தச்சிகரம் 28,146 அடிஉயரமுள்ளது. உலகின் மகாஉன்னதமான எவறெஸ்ற் சிகரத்தில் ஏறுவதிலும்பார்க்க இதில் ஏறுவது அதிகம்கஷ்டமென நம்பப்பட்டுவந்தது.

● அப்போது ஆஸ்திறேலியாவிலே உள்நாட்டின் தேவைக்கென்று நெல் உற்பத்திசெய்யப்பட்டது. தற்போதோ நெலஅரிசி அந்நாட்டின் விசேஷப்பட்ட ஓர்ஏற்றுமதிப்பொருள் ஆகிவிட்டது. ஆங்கே இப்போது 25,000 ஏக்கர்நிலத்தில் நெற்செய்கை நடைபெறுகின்றது. அங்கு ஏக்கர்ஒன்றுக்கு நூறுபுசல் வரையிலே நெல்விளைகின்றது.

● ஸ்பானியதேசத்தின் இரண்டாவது மகாஉந்நதமானமலை வெலெற்று என்பது. இது அத்தேசத்தின் மகாஉந்நதமான முல்காக்லின் மலையிலும் 37 அடிமாத்திரமே பதிவானது. ஆனால், இந்த வெலெற்று மலையின் உச்சியிலே 68 அடிஉயரமாக பனிமயமாதாவின் மகாப்பெரிய சுரூபம்ஒன்று சமீபத்திலே ஸ்தாபிக்கப்பட்டதும் இதுவே அத்தேசத்தின் மகாஉந்நதமலையாய் விளங்கவிருக்கிறது.

● இத்தாலியிலே ஜெனோவா நகருக்குச் சமீபமான சாம்பியர் தறேனா எனுமிடத்தில் அர்ச். ஜோண் பொஸ்கோபேரால் கட்டியெழுப்பப்பெற்ற புதியகோவில்ஒன்று சமீபத்தில் திறந்துவைக்கப்படலாயிற்று. இத்தாலியிலே இந்த அர்ச்சியசிட்டவர் பேரால், அர்ப்பணஞ்செய்யப்பெற்ற முதலாவது விசாலணைப்பங்குக்கோவில் இதுவாகும்.

● ஓர் இத்தாலிய புவனசாஸ்திரியான 74வயதுடைய அன்ரோனியோ றெனுற்றோ ரொனியோலோ அவர்களின் மாணத்தாலே பாப்பரசரின் விஞ்ஞானசாஸ்திர கழகத்தில் மற்றுமோர்ஸ்தானம் காலியாகியிருக்கிறது. இவர் பூகோளசாஸ்திரவிஷயமாய் இருநூற்றுக்குமேற்பட்ட பிரசுரங்கள் வெளியிட்டிருக்கின்றார். 1936-ம் ஆண்டுமுதல் இக்கழகத்தில் ஓர் அங்கத்தவராய் இருந்துவந்தார்.

● புரொட்டெஸ்தாந்தர் அதிகப்பற்றுகவுள்ள பின்லாந்து பரிசுத்தஸ்தானத்திற்குத் தனது ஸ்தானிகரை அனுப்பியிருக்கிறது.

● நற்கருணைப் பாப்பானவராகிய பத்தாம்பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம்அருளிய சென்ற வருட வைகாசிமாதத்தில் ஐக்கியநாடுகளிலே 5,00,000 சிறுவர்கள் முதல்நன்மை பெற்றார்கள்.

● "மிசூறியின்தாய்" எனத் தெரியப்பட்ட திருமதி விறெட் சூஸ்றெர் தனது ஏழுபிள்ளைகளையும் வளர்த்துவந்தது மாத்திரமல்ல, வேறு ஒன்பது பேரையும் எடுத்து வளர்த்தாள். அவ்வெழுவரில் மூவர் கன்னியாஸ்திரிகள். மேலும் 1,500 புத்தகங்கள் வாங்கி வாசித்து வீட்டுநூல்நிலையத்தில் காப்பாற்றினாள். வீட்டுவேலைகளையும் தானே பார்த்தாள். புருஷனுடைய சம்பளமோ தபால்காரனுடைய அற்ப சம்பளந்தான்.

● ஜப்பானிலே கோஷியா இஷாகா என்ற பதின்மூன்றுவயதுடைய பாலிய மல்யுத்தவீரன் இருக்கின்றான். இவன் "சூமோ" மல்லன் என்று அழைக்கப்படுகின்றான். இவனுடைய நிறை 261 றாத்தல். சமீபத்திலே அங்கு ரோக்கியோ தலைநகரிலுள்ள ஹமாச்சோபாக்கத்தில் நடைபெற்ற மல்யுத்தப்போட்டியில் பங்குபற்றிய 700 மல்லர்களில் இவனும்ஒருவன்.


வெளிவந்துள்ளது!

**எட்டாம் வகுப்புக்குரிய மாணவர் பூமிசாஸ்திரம்**

முன்னர் வெளிவந்துள்ள 'மாணவர் பூமிசாஸ்திரம்' எனும் நூல்களைத் தொடர்ந்து எட்டாம் வகுப்புக்குரிய மாணவர் பூமிசாஸ்திரம் புதிதாக வெளிவந்துள்ளது. இந்நூலில் **இலங்கையும், ஆசியாவும்** விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டுள்ளது. எட்டாம்வகுப்பு மாணவருக்கு இது இன்றியமையாத ஒரு நூலாகும்.

**விலை ரூபா 2-50**

அர்ச். பிலோமினா அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.


## "நீ கடைசிச்சல்லி ..."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுடையவும், எங்களுடையவும் சகோதரர்களாகிய அந்தஒட்டோலக சபையாரோடுசேர்ந்து சர்வேசுரனின் பேரின்பதரிசனத்திலே என்றென்றைக்கும் வீற்றிருப்பார்கள். இவ்விதம் பரலோகம்போய்ச் சேருகிறவரை உத்தரிக்கிறஸ்தலத்தில் இருக்கின்ற புண்ணிய ஆத்துமாக்கள் "உத்தரிப்புச் சபையார்" என அழைக்கப்படுகின்றார்கள்.

ஆகவே, தேவனுடையஇராச்சியத்தில் யுத்தசபை, உத்தரிப்புச்சபை, ஒட்டோலகசபையென முப்பிரிவான ஞானச்சபைகள் உண்டு. மோட்சத்திலே சர்வேசுரனை முகமுகமாகத்தரிசித்து நித்தியபேரின்பபாக்கியத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒட்டோலகசபையாராகிய மோட்சவாசிகள் யுத்தசபையாராகிய எங்களுக்கும், உத்தரிப்புச்சபையாராகிய உத்தரிக்கிறஸ்தலத்துப் புண்ணியஆத்துமாக்களுக்கும் உதவிசெய்கிறார்கள். அதாவது, நாங்களும் எங்கள்ஞானயுத்தத்திலே தங்களைப்போன்று வெற்றிகொண்டும், உத்தரிப்புச்சபையார் விரைவிலே குணப்பட்டும் தங்களுடன்வந்து சேர்ந்து ஒன்றிக்கும்பொருட்டுத் தேவசமூகத்திலே இருசபையாருக்கும் தங்கள்வேண்டுதலால் சதா உதவிபுரிந்து வருகிறார்கள்.

பாயும்படுக்கையுமாய்க் கிடந்துஅழுந்தும் ஓர்வியாதிக்காரன் தனக்குத்தானே எந்தவிதமானஉதவியும் செய்யக்கூடிய நிலைமையில் இருப்பானா? அன்றேல் சிறைச்சாலையிலே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஓர் கைதியானவன் தன்னை விடுவித்துக்கொள்ளத் தனக்குத்தானே உதவிசெய்யக்கூடியவனாய் இருப்பானா? ஓர்போதுமில்லை. அவ்வாறே, உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களும் தங்களுக்குத்தாங்களே எவ்வித உதவிஒத்தாசையும் செய்யவியலாதவர்களாய்த் தங்கள் ஞானச்சகோதரராகிய யுத்தசபையாரினதும், ஒட்டோலகசபையாரினதும் உதவியைநாடி, எங்கள்இருசாராரினதும் இரக்கத்திலேயே தங்கியிருக்கின்றார்கள். அதனால் நாங்கள் உதவிசெய்யாவிடின் — நாங்கள் இரங்காவிடின் அவர்கள் உத்தரிக்கிறஸ்தலத்தின் அக்கினிச்சூளையில்கிடந்து வேதனைப்பட்டுக் கடைசிச்சல்லி உத்தரிக்கும்வரையும் அங்கிருந்து உத்தரித்துத் தீரவேண்டியதுதான்.

## செவிடருக்குப் புதியபாஷை

கேள்விப்புலன் இழந்தவர்களுடன் பேசுவதற்கான புதிய பாஷைஒன்றைப் பிரசித்திபெற்ற வழக்கறிஞரும், விஞ்ஞானியுமான சேர் றிச்சேட் பேகட் அவர்கள் வகுத்துவருகின்றார். இவர் வகுத்துவருகின்ற திட்டப்படி, கைவிரல்களால் வெவ்வேறுவிதமான சைக்கினைகளைச் செய்வதன்மூலம் செவிடர்களுடன் சம்பாஷிக்கலாம். கைவிரல் சைக்கினை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர்விதமான அர்த்தத்தைக் கிரகித்துக்கொள்ளும் வகையிலே செவிடர்களுக்கு இப்புதியபாஷையைப் பயிற்ற வேண்டுமாம். அவர்களுக்கு இப்புதிய பாஷையைப் பயிற்றுவது மிகவும் இலகுவான காரியமென்று சேர் றிச்சேட் பேக்ட் அவர்கள் கருதுகின்றார்.

## தித்தானிக் கப்பல்விபத்து

1912-ம்ஆண்டின் சித்திரைமாதத்திலே வடஅத்திலாந்திக் சமுத்திரத்தில் பிரமாண்டமான பனிக்கட்டிப் பாளமொன்றில்மோதுண்டு ஆழிவாய்ப்பட்ட 'தித்தானிக்' கென்ற பாரியகப்பலிலே அரிதாகஉயிர்தப்பியவர்களில் திருமதி மேரி ஆகதா ஓ'டொனுகு வேஎனும் மாது சமீபத்திலே தனது 61-ம்வயதில் அமெரிக்கஐக்கியதேச சென்பீற்றேர்ஸ்பேர்க் பீச்நகரில் காலஞ்செல்லலாயினள். அப்போது தித்தானிக்கப்பலிலே அயர்லாந்திலிருந்து அமெரிக்கஐக்கியதேசத்துக்குப் போகும்வழியில் இந்தப்பயங்காவிபத்து ஏற்படலாயிற்று. தேவாதீனமாகக் காப்பாற்றப்பட்டஇவள் பிந்தஒருவாறு அத்தேசம் போய்ச்சேர்ந்து இருவருடங்களின்பின் விவாகஞ்செய்துகொண்டாள்.

## ருஷியமக்களின் வாழ்க்கைத்தரம்

மஸ்கோவில் நடைபெற்ற மேதின விழாவில் கலந்துகொள்ளுவதற்காக ருஷியா சென்றிருந்த தொழிலாளர் தலைவர் திரு. எஸ். சி. சி. அந்தோனிப்பிள்ளை சென்ற ஆனிமாதம் 19-ந் திகதியன்று சென்னையில் நடந்த வரவேற்புப் பொதுக்கூட்டம் ஒன்றிலே பேசுகையில் பின்வருந் தகவல்களைத் தெரிவித்தார்: "ருஷியாவின் தொழிற்சாலைகளிலும், கூட்டுப்பண்ணைகளிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களின் நிலையைக் கண்டறியும்பொருட்டு லெனின்கிறாட், ஸ்ராலின்கிறாட் முதலிய நகரங்களுக்குச் சென்றிருந்தேன். அப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் சமீபகாலத்தில் அபிவிர்த்தியடைந்துள்ளது. ஆனால், ஐரோப்பியநாடுகளில் வசிக்கின்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தைவிட இவர்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. ருஷியாவில் தனிப்பட்ட முயற்சிஎன்பது அநேகமாக இல்லையென்றே சொல்லலாம். அங்குள்ள தொழிற்சங்கங்கள் கூட்டுப்பேரம்எதுவும்நடத்துவதில்லை. அதிகசம்பளம் கேட்கச்சொல்லித் தொழிலாளரைத் திரட்டுவதும் இல்லை."

* * *

● இரட்டைஜெற் எஞ்சின்கள் பூட்டிய கன்பெறாவெடிகுண்டு விமானம்ஒன்று சென்றசெவ்வாய்க்கிழமை கனடாதேச ஒற்றாவாநகரிலிருந்து அந்திலாந்திக் சமுத்திரத்துக்குமேலாகப்பறந்து 6 மணித்தியாலம் 42 நிமிஷம் 12 செக்கனில் லண்டன்நகர் போய்ச் சேரலாயிற்று. முன்னர் எந்தஒருவிமானமும் பறந்திராதவிதமாய் இது மணித்தியாலம் 496·8 மைல் வீதம்பறந்து உலகப்பிரசித்திபெற்றிருக்கின்றது.


## முத்தித்திறவுகோல்

எம்மிடத்தில் தற்போது விற்பனைக்குத் தயாராகிவிட்டது. தேவையானோர் மேல்வரும் விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

| விலை பிரதி : | ரூ. ச. |
|---|---|
| தோற் கட்டு : | 3—50 |
| கலிக்கோக் கட்டு : | 2—50 |



## இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. சத. |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) | ...15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் | ... 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) | ... 8-50 |
| ,, (சிறிது) | ... 3-75 |
| ஞானோபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) | ... 9-75 |
| சத்திய வேதாகம சங்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் | ... 1-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் | ... 3-25 |
| வாழ்க்கையில் வழிகாட்டி | ... 2-75 |
| கன்னியர் ஒழுக்கம் | ... 1-00 |
| திருப்பாடுகளின் மேல் புதுத் தியானங்கள் | ... 1-25 |
| தாவீது இராசாவின் 150 சங்கீதங்கள் | ... 2-60 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு | ... 2-75 |
| அன்பின் அனல் | ... 45 |
| அன்பின் அரசர் | ... 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | அச்சில் |
| மன்ரேசா | ... 3-00 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 1-00 |
| ஞானசீவியம் | ... 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) | ... 1-25 |
| என்பலி (சங்கீதம் இல்லாமல்) | ... 40 |
| மரியாயின் மைந்தர் பொக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் | ... 2-00 |
| கற்பு என் பொக்ஷம் | ... 50 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை | ... 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன்? | ... 25 |
| புதுநன்மை நடத்திட்டம் | ... 90 |
| திருக்குடும்ப பக்திமாலை | ... 3-00 |
| பத்தாம் பத்திநாதர் | ... 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் | ... 2-00 |
| திருஇருதய நவநாள் | ... 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் | ... 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்க மாதம் | ... 1-65 |
| சனிக்கிழமைப் புதுமை | ... 2-00 |
| ஞாயிற்றுக்கிழமைப் புதுமை | ... 1-30 |
| திங்கட்கிழமைப் புதுமை | ... 1-30 |
| தாழ்ச்சிக் கண்ணாடி | ... 50 |
| துறவற சல்லாபம் | ... 1-00 |

* * *

கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்

| | |
|---|---|
| பலித்த கனவு | ... 1-00 |
| தமிழ்த்தூது | ... 3-60 |
| அர்ச். சவேரியார் | ... 1-00 |
| தேவப்பிரசைகள் திருச்சரிதை | ... 1-60 |
| அர்ச். சரித்திரம் 4 பாகமும் | ... 12-00 |
| யேசு திருச்சரிதை | ... 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| அர்ச். அருளானந்தர் | ... 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| அர்ச். வின்சென்ட் தெ பவுல் | ... 1-10 |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு | ... 2-00 |
| பங்கிராஸ் | ... 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் | ... 2-00 |
| திக்கற்ற தையல் | ... 2-00 |
| மலரோ மணமோ | ... 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் | ... 1-55 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.
● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

கிடைக்குமிடம் :—

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 30-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org